www.tamilarangam.net

RECEIVED 27 MAY 1986

9278



# SOLT

STUDENT ORGANISATION OF LIBERATION TIGERS

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX.)

14.மே.1986. வேட்டு-9 அன்பளிப்பு 50p


## "We will fight until victory"



"The establishment of an independent sovereign state will be the only solution, the permanent solution to the Tamil national question. We are firmly and irrevocably committed to this political objective. We will continue to fight until we regain our homeland and establish an independent state", declares V. Prabakaran, leader of the Liberation Tigers of Tamil Eelam in a statement to the press. Mr. Prabakaran further states :

"REVOLUTIONARY SOCIALISM IS MY POLITICAL PHILOSOPHY."

# THE STRIKING TIGER

The ethnic conflict between the Tamils and the Sinhalese in Sri Lanka shows no sign of abating. The Tamil militants, especially the Liberation Tigers of Tamil Eelam (LTTE), seem determined to pursue their militant tactics. Velupillai Prabhakaran, Military Commander of the LTTE, who lives in the jungles of Jaffna, northern Sri Lanka, in a rare interview spoke to GENTLEMAN about the future of the strife-torn island.

Velupillai Prabhakaran, the Military Commander of the Liberation Tigers of Tamil Eelam (LTTE), has not bidden farewell to arms. When President Jayewardene returned to Colombo from the Thimphu summit, Prabhakaran was willing to talk peace. But within weeks of the Thimphu peace talks, the Sri Lankan Army had resumed its attacks on the Tamils. Recent bloody events in the once-idyllic, strife-wracked island have provoked Prabhakaran to return to arms. Says he: "I am only concerned with the political liberation of our oppressed people."

Prabhakaran went underground when he was 19 and is even today living largely in the wild undergrowth of the forests of Jaffna. An angry militant leader, Prabhakaran, like a rampaging leopard, often changes his spots in a hide-and-seek war-game with the Sri Lankan Army. "The ruthless manner in which our people were murdered made me realize that we are subjected to a calculated programme of genocide. I felt that armed struggle is the only way to protect and liberate our people." Prabhakaran is wedded to the liberation of the Tamils; he lost contact with his parents when he was forced to go underground.

Prabhakaran now sees a sinister chapter in international political intrigue being written in Sri Lanka. He sees the American presence on the island as a ploy to bring Sri Lanka under US control. The other players in Sri Lanka, according to Prabhakaran, are Israel, Pakistan, South Korea and China. Despite the global onslaught, Prabhakaran and his Tigers plan to hold their ground. In a rare interview, the controversial freedom fighter spoke at length to JASVINDER SINGH. Excerpts:

**GENTLEMAN**: *What compelled you to take up arms?*

**VELUPILLAI PRABHAKARAN**: It is the plight of the Tamil people that compelled

8ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வேங்கை புயல்

அன்பு நண்பா!

அண்மையிலே நம் மண்ணில் நடந்த சில சம்பவங்களின் நிமித்தமாய், இவ்விடத்தே பரப்பப்பட்ட சில வேறான செய்திகளினால் நீ குழப்பம் அடைந்திருக்கலாம். எனினும் மக்களோடு மக்களாய் வளர்ந்து வரும் நம் இயக்கமானது தவறான நடவடிக்கையிலோ அன்றேல் தான்தோன்றித் தனமான செயல்களிலோ ஈடுபட்டிருக்க மாட்டாது என்கிற உறுதியான முடிவினை நீ கொண்டிருப்பாய் என எண்ணுகிறேன்.

நண்பா! 1970களிலே நம் இயக்கமானது ஆரம்பிக்கப்பட்ட போது, அப்போதைய ஆட்சியின் கைப்பொம்மைகளாய் இருந்த துரோகிகளை ஒழித்துக்கட்ட வேண்டியிருந்தது. அப்பொழுது சிலர் அதனை எதிர்த்ததுமன்றி, அத் துரோகிகளைத் தியாகிகளாக சிலை அமைத்தனர். ஆனால் கால ஓட்டத்தில், அவ்வாறு எதிர்த்த மக்களே, அன்று எடுக்கப்பட்ட முடிவும், சந்தர்ப்பமும் சரியென உணர்ந்தனர். அந்த நிலைக்கு இன்றைய சில நண்பர்கள், முக்கியமாக வெளிநாட்டில் வாழும் தமிழ் அன்பர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

நண்பா! அண்மைச் சம்பவம் நடைபெற்ற மறுநாள் தமிழீழ மெங்கும் வெளியாகும் பத்திரிகைகள் (ஈழநாடு, வீரகேசரி) "தமிழ் மக்கள் குதூகலம்" என்கிற தலைப்புடன் செய்திகள் வெளியிடப்பட்டதையும் நீ அறிந்திருப்பாய் என எண்ணுகிறேன். இச் சம்பவம் நடைபெற்றதும் அறிந்த உன் போன்ற நண்பர்கள் சிலர் குழப்பம் அடைந்த போது நாம் "காலம் தான் பதில் கூற வேண்டும்" என்றோம். அதே போன்று நீ நாளடைவில் உண்மை நிலையினை புரிந்துவருகிறாய்.

நண்பா! அன்றொருநாள் பங்கையின் குமுறல் படித்தேன். அதில் புலிகள் பற்றி சிங்கள அரசின் எண்ணத்தைப் பினவருமாறு எழுதியிருந்தார்;

'புலிகள் புலிகள் யாவரும் புலிகள்!
எலிகள் நரிகள் பூனைகள் பருந்துகள்
நாய்கள் யானைகள் சிங்கங்கள் கரடிகள்
பாம்புகள் மந்திகள் பறப்பன ஊர்வன
குயில்கள் மயில்கள் குருவிகள் கோட்டான்கள்
எல்லாம் புலிகள் எல்லாம் புலிகள்
சிங்கள எதிரின் எல்லாம் புலிகள்'

ஆம் நண்பா! சிங்கள எதிரின் இவை யாவும் புலிகளாய் தான் தெரிந்தன. அதனால்தான் புலிகளை மிகவும் இலகுவாக நினைத்ததுமன்றி அப்பாவிகளைக் கொன்றுவிட்டு புலிகளைக் கொன்றுவிட்டோம் எனத் தம்பட்டம் அடித்தனர். இவ்வாறு சிங்கள அரசு நினைக்க, தமிழ் மக்கள் மத்தியிலே "புலிகள்" என்று விசமிகளால் நடைபெற்ற சில சம்பவங்களால் புலிகள்பற்றி சிலர் கீழ்வருமாறு தவறாக புரிந்தனர்;

புலிகள் புலிகள் யாவரும் புலிகள்
பலிகொள்ள அலைகின்ற பரதேசிக்கூட்டங்கள்
காமுகர்கள் கயவர்கள் கல்நெஞ்சம் கொண்டோர்கள்
கள்ளர்கள் கொள்ளையர்கள் கடத்தல்காரர்கள்
தானென்ற மமதையுள்ளோர்கள் தலைக்கனம் கொண்டோர்கள்
எல்லோரும் புலிகள் எல்லோரும் புலிகள்

என்று சில இயக்கத்தினர் தமிழீழத்திலும், தமிழகத்திலும், உலகத் தமிழர் மத்தியிலும் தவறான கருத்துக்களை வளர்க்க முற்பட்டனர். ஆனால் கடந்த மாதம் இறுதிவாரம் ஓர் முக்கியமான காலம். புலிகள் என்றால் யார் என்பதனைத் தவறாகப் புரிந்த சில தமிழ் மக்களுக்கும் சிங்கள அரசிற்கும் உலகிற்கும் உணர்த்திய காலம். புலிகள் கட்டுப்பாடும் கண்ணியமும் நிறைந்தவர்கள் என்பதனையும், போலிகளும், சந்தர்ப்ப வாதிகளும், தமிழீழ மக்களை ஏமாற்ற முடியாது என்பதனையும் எதிரிக்கும் உலகிற்கும் உணர்த்திய காலம்.

நண்பா! தமிழ் மக்களுக்காகவே போராடுகிறோம் என்று கூறி, தமிழ் மக்களிடையே கொள்ளையடித்து, அவர்களையே ஆயுதமுனையில் துன்புறுத்தியதுடன் கோவில்களிலுள்ள விக்கிரகங்களையும், பொது ஸ்தாபனங்களையும், தனியார் சொத்துக்களையும் கொள்ளையடித்துவிட்டு தாம் புலிகள் என்று கூறித்திரிந்த TELO இயக்கத்தினரை நாம் பல சந்தர்ப்பங்களில் கையும் மெய்யுமாக மக்கள் முன்னிலையில் பிடித்துப் பகிரங்கப்படுத்திய போதிலும், மக்களாகவே இவர்களை இனம்கண்டு கொள்ள வேண்டும் என விட்டோம்.

நண்பா! ஆனால் கடந்த சில மாதங்களாக சில அரசியல் சூழ்ச்சியாளர்களின் கைப்பொம்மைகளாகிய TELO இயக்கத்தினர், புலிகளின் வலிமையை குறைப்பதற்கான முயற்சியில் இறங்கினர், மக்கள் இயக்கமான புலிகளை இலட்சியப் பாதையை விட்டு விலகி, பேச்சு வார்த்தை போன்ற அற்ப அரசியல் சாக்கடையில் வீழ்த்திவிட எண்ணி, மக்களை துன்புறுத்தலும், ஆள்கடத்தல், கொள்ளைகள் போன்ற கொடூர செயல்களை தமிழீழம் எங்கும் செய்யத் தொடங்கினர். TELO இயக்கத்தினர் எதிர்பார்த்துத் தொடங்கியது போன்று, தமிழீழ மக்களுக்கான கொடுமைகளைத் தட்டிக் கேட்டனர் புலிகள். இதனால் புலிகளில் இருவரை கடத்திச் சென்றனர். அதனைக் கேட்கச் சென்ற லிங்கம் என்ற புலித்தளபதி ஒருவரை காட்டுமிராண்டித்தனமாக சுட்டுக் கொன்றனர். இதன் விளைவுகளால் நம் தலைவரின் கட்டளைப்படி, TELO இயக்கத்தினரின் சகல முகாம்களும், புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

நண்பா! இவ்வாறு முகாம்கள் யாவும் புலிகளுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர எத்தனித்த போது, பல முகாம்களில் இருந்தவர்கள் ஆயுதங்களுடன் சரணடைந்த போதிலும், சிலர் புலிகளை எதிர்த்துத் தாக்கியமையினால் சிலர் புலிகளினால் கொல்லப்பட்டுள்ளனர். இதற்காக நாம் அநுதாபம் தெரிவிப்பதுடன் கவலைப்படுகின்றோம்.

நண்பா! இவர்களும் தமிழீழத்திற்காகப் போராடப் புறப்பட்டவர்கள் தானே என சிலர் கவலைப்படுகிறார்களாம். தமிழ் மக்களிடமே கொள்ளையடித்து, மக்களைக்கடத்தி, கொலைசெய்து துன்புறுத்தும் இவர்களா போராளிகள்? இவர்களா தமிழீழத்திற்காகப் போராடுகிறவர்கள்? நாளைய தமிழீழத்திலே இவர்களுடைய அடக்குமுறைகள் எந்தளவிற்கு மேலோங்கி நிற்கும்?

நாளைய தமிழீழத்தைச் சூறையாட நிற்கும் வல்லரசுகளின் உளவுக்கூலிகளாக மாறி ஈனம் சேர்க்க முனைபவர்கள் இந்தச் சதிகாரர்கள் தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது

18ம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் புரட்சித் தீயில் கருகட்டும் சிங்கள ஆதிக்கம்!

"பேசித் தீர்வு காணுங்கள்" என்று இந்திய அரசு கீறல் விழுந்த இசைத்தட்டு மாதிரி திரும்ப திரும்ப சொன்னாலும், "ராணுவத் தீர்வுதான் ஒரே வழி!" என்று சுட்டுத் தள்ளிய படியே சொல்லி வருகிறது சிங்கள அரசு.

தரை வழியாகச் சென்று தமிழர்களை எதிர்க்க முடியாத சிங்கள பேடி ராணுவம் வான் வழியாக விமானங்களில் வந்து சுட்டும் குண்டுகளை பொழிந்தும் தன் பழி தீர்ப்பை நிறைவேற்றி வருகிறது.

தமிழ் ஈழத்தில் இப்போது நடப்பது அப்பட்டமான இனப் படுகொலையே! "அப்பாவித் தமிழர்கள் 100 பேரைக் கொன்றால் அதில் நிச்சயம் இரண்டு பேர் போராளிகளாக இருப்பார்கள் என்பது மொசாத்தின் தத்துவம். இந்த கணக்கில் சிங்கள ராணுவம் இப்போது வேட்டை ஆடி வருகிறது.

சிங்கள விமானங்களின் குண்டு வீச்சிலிருந்து மக்கள் எப்படி உயிர் தப்புவது என்பதற்கான விளக்கக் குறிப்புகள் இப்போது புலிகளால் அங்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் ஈழத்தின் வட பகுதிக்கு பொறுப்பாளராக இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி ஒருவரை அண்மையில் சந்திக்க முடிந்தது.

தற்போது ஈழம் எப்படி இருக்கிறது என்பதை அறிவதற்காக அவரிடம் பேசிய போது சில தகவல்களை கூறினார்.

"சிங்கள சிப்பாய்கள் 'ரிஸ்க்' எடுப்பதற்கு இப்போது மிகவும் பயப்படுகிறார்கள்" என்ற அவர் மேலும் சொன்னார்:

"சுதுமலை பகுதியில் எங்கள் முகாம் இருக்கிறது என்பதை துரோகிகள் மூலம் தெரிந்து கொண்ட சிங்கள ராணுவம் ஒரு விசேஷ அதிரடிப் படை மூலம் எங்கள் முகாமை வான் வழியாக வந்து தாக்கியது:

மொத்தம் 4 ஹெலிகாப்டர்களில் வந்து தாக்கினார்கள். எங்களிடம் விமான எதிர்ப்பு பீரங்கிகள் இல்லை என்றாலும் இருக்கிற ஏவுகணைகளை கொண்டு தற்காப்பு தாக்குதல் நடத்தினோம். இதில் 2 ஹெலிகாப்டர்கள் சேதமாகின. ஒரு சிங்கள கேப்டன் கொல்லப்பட்டான். 3 கமாண்டோக்களும் செத்தனர். இந்த தாக்குதல் அவர்களுக்கு முழுத் தோல்வியே ஆகும்.

இதன் பிறகு ஜனவரி 31-ல் முதன் முதலாக தீபகற்ப எல்லைப் பகுதியில் மிக் 15 ரக இத்தாலிய் விமானங்களில் வந்து சரமாரியாக் குண்டு வீசினார்கள். மார்ச் 12-ம் தேதி மட்டும் 4 தடவை வந்து குண்டு வீசியிருக்கிறார்கள்.

'ராக்கெட் மார்டர்' எனும் நவீனரக ஏவுகணைகளை இப்போது கம்ப்யூட்டர் முறையில் ஏவிவிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இது கட்டிடங்களையும் வாகனங்களையும் நாசமாக்க மிகவும் பயன்படும். அடுத்து 50 எம். எம். காலிபர் மிஷின் கன்களால் சரமாரியாக விமானத்திலிருந்து சுடுகிறார்கள். இதன் குண்டு 2 கிலோ மீட்டர் தூரம் போகும். 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆளைக் கொல்லும் ஆற்றல் உண்டு.

இயக்கச்சி, வெற்றிலைக் கனி, வல்வெட்டி, சுதுமலை, தாவடி, சுருவில், உரும்பராய், மாதகரி ஆகிய ஊர்களை விமானத்திலிருந்து குண்டு வீசி நாசமாக்கினார்கள்.

ஒரு தடவை குண்டு வீசினால் 2, 3 நாளைக்கு ஸ்தம்பித்துப் போய் விடும். மக்கள் நடமாட்டமும் இருக்காது. தொழிலும் முடங்கிவிடும். ஆனால் இப்போது எங்கள் மக்கள் குண்டு வீச்சுக்கு பழகிப் போய் விட்டார்கள்.

எங்களுடைய துண்டுப் பிரசுரங்களைப் படித்துவிட்டு அவர்களே பதுங்கு குழி வெட்டிக் கொண்டு விமானத் தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள்.

விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மட்டும் எங்களிடம் இருக்குமேயானால் போராளிகளுக்கு வெற்றி கிட்டிய மாதிரிதான்!

"மற்ற ஆயுதங்களையும் விட்டு விட்டு ஓடும் சிங்கள ராணுவம் இவற்றையும் தராமலா போய்விடும்?" என்று சிரித்த படியே கேட்டார் புலிகளின் தளபதி!

"தமிழ்— சிங்கள புத்தாண்டு ஏப்ரல் 14-ம் தேதி வருவதையொட்டி தற்காலிகமாக விமான தாக்குதல் நிறுத்தப்படும் என்று 'அதுலத் முதலி' தெரிவித்து இருக்கிறாரே—இது உண்மையாக இருக்குமா?" என்று நிருபர் கேட்டதும் "நிச்சயமாக நடக்காது" என்று தளபதி கூறினார்.

விமான தாக்குதல் நடக்காது என்று அறிவித்த பிறகு பிற்பகல் 2 மணிக்கு பலாலியில் விமானம் மூலம் குண்டு வீசி பொதுமக்கள் 6 பேர்களை கொன்று இருக்கிறார்கள். வவுனியா ராணுவ முகாமிலிருந்து மிக் 15 ரக விமானங்கள் கிளம்பி வந்து தாக்குதல் நடத்தி விட்டு திரும்புகின்றன. ஹெலிகாப்டர்கள் அந்தந்த ராணுவமுகாம்களில் இருந்து கிளம்பி வருகின்றன" என்றார், அவர்.

"சிங்கள ராணுவம் சர்வதேச நாடுகளிடம் ஆயுத உதவி பெற்று நாள்தோறும் வலிமை ஆகிக் கொண்டே போகிறது. நீங்கள் வலிமை பெற உங்களுக்கு உடனடித் தேவை என்ன?"

"இந்தியா எங்களை அங்கீகரித்தால் போதும்! ஆயுதங்கள் தர வேண்டாம். எங்களை அங்கீகாரம் மட்டும் செய்து விடுங்கள். மற்றவைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். எங்கள் மக்கள் தினமும் கொன்று குவிக்கப் பட்டு வருகிறார்கள் என்றாலும் விடுதலை உணர்வு கொஞ்சமும் குறையவில்லை அவர்களுக்கு!

சிங்களருடன் சேர்ந்து வாழவே முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டோம். அக்கிரமமாக எங்கள் பகுதிகளை சிங்கள மயமாக்கிக் கொண்டு வருகிறார்கள். தமிழினம் அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டுமானால் எங்களை அங்கீகாரம் செய்வது தான் நல்ல வழி!"

"யாழ்ப்பாணம் இப்போது எப்படி இருக்கிறது?"

"எங்களுடைய முழுக் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருக்கிறது. சிங்கள ராணுவம் உள்ள யாழ் கோட்டையில் இப்போது மின்சாரம் கிடையாது. தண்ணீர் கிடையாது. உணவு கிடையாது. எல்லாம் எங்கள் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

இதனால் அவர்கள் ராணுவமுகாமுக்கு ஹெலிகாப்டர் மூலம் தான் உணவு, தண்ணீர், பெட்ரோல் எண்ணெ ஆகியவைகளை கொண்டு வந்து இருக்கிறார்கள். எங்களின் அனுமதி இல்லாமல் அவர்கள் தரை வழியாக முகாமை விட்டு வெளியேற முடியாது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

தீபகற்ப பகுதியில் மொத்தம் 11 ராணுவ முகாம்கள் இருக்கின்றன. அவைகளுக்கும் உணவு வகையறுக்கள் ஹெலிகாப்டர் மூலம்தான் நடக்கின்றன. அப்படி உணவு வரும்போது முதலில் கண்டபடி சுற்றுப் புறங்களில் சுட்டு குண்டுகளை தீர்த்துக் கொள்கிறார்கள். அதாவது பயமுறுத்தல் நடவடிக்கையாம்" என்றபடி சிரித்தார், புலிப்படை தளபதி.

"எங்கள் ஈழ மக்களை குழப்புவதற்காக விமானத்திலிருந்து வீசப்பட்ட துண்டு பிரசுரம் இது" என்று ஒரு பிரசுரத்தையும் 'தேவி' நிருபரிடம் கொடுத்தார்.

அந்த பிரசுரத்தில் போராளிகளை இழிவு படுத்தியிருந்தனர். எல்லாம் மொசாத்தின் திட்டம்!

சில புகைப் படங்களையும் கொடுத்தார் தளபதி.

சேற்றில் விழுந்ததால் வெடிக்காமல் போன 4 அடி உயர குண்டு இப்போது புலிகளிடம் காட்சிப் பொருளாக இருக்கிறது.

எங்கே தாக்குதல் நடந்தாலும் வயர்லெஸ் மூலம் தெரிந்து கொண்டு மின்னலாக பாய்ந்து பதிலடி கொடுக்கிறார்கள், நமது புலிகள்.

—பேட்டி: பெல்லி.

**ராணுவ முகாம்களே சிங்கள படைக்கு சிறைச்சாலை ஆனது!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர் முனையில் விடுதலைப் புலிகள்

**01-04-86** : யாழ் மாவட்டத்திலுள்ள வல்வெட்டித்துறை இராணுவமுகாமிலிருந்து ஏராளமான இராணுவத்தினர் கவச வாகனங்களில் புறப்பட்டு வரும்போது எமது படையினர் இராணுவத்தினர் மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர். எமது தாக்குதலிற்கு ஈடு கொடுக்க முடியாத இராணுவத்தினர் முகாமிற்குள் சென்று பதுங்கிக் கொண்டனர்.

**02-04-86** : கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கொக்காவில எனுமிடத்தில் 34 வாகனங்களை கொண்ட இராணுவ ரோந்து தொடர் மீது விடுதலைப் புலிகளின் கெரில்லா அணியினர் கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் ஒரு இராணுவ லொறி (Truck) ஒன்றும் கவச வாகனமொன்றும் முற்றாக சேதமடைந்தது இதனையடுத்து இருதரப்பினரிற்கு மிடையே கடுஞ் சண்டை மூண்டது. இத்தாக்குதலில் மொத்தமாக 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல நவீன ஆயுதங்களும் வெடி பொருட்களும் எம்மால் கைப்பற்றப்பட்டன. எமது வீரஞ் செறிந்த தாக்குதலின்போது வதனன், பெஞ்சமின், ஜோன், மோகன் ஆகிய நான்கு வீர மறவர்கள் வீர மரணமெய்தினார்கள்.

**04-04-86** : தொண்டமானாறு (யாழ் மாவட்டம்) இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் புலிகளைத் தாக்குவதற்காக அதன் அயற்புறங்களில் பதுங்கியிருந்தனர். முகாமிற்கு வெளியே இராணுவத்தினரின் நடமாட்டத்தை அறிந்த புலிகள், இராணுவத்தினர் மீது தாக்குதல் நடாத்தி அவர்களை முகாமிற்குள் ஓட ஓட விரட்டியடித்தனர்.

**05-04-80** : 8 வாகனங்களில் கரடியனாறு (மட்டக்களப்பு மாவட்டம்) நோக்கி வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் மீது எமது அதிரடிப்படைப்பிரிவு ஒருக்கட் தாக்குதலை மேற்கொண்டது இதில் ஒரு இராணுவ லொறி (Truck), ஒரு கவசவாகனம் ஆகியன முற்றாக சேதமடைந்தன. அதிலிருந்த 9 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். இதனையடுத்து எம்மவர்களிற்கும் இராணுவத்திற்குமிடையே 3 மணித்தியாலமாக சண்டை நடைபெற்றது. இத்தாக்குதலில் தமிழீழ வரலாறு படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வீர இளைஞன் புவிராஜ் வீர மரணமெய்தினான்.

**06-04-86** : யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து இனப்படுகொலையை மேற்கொள்ளுவதற்காக ஏராளமான இராணுவத்தினர் கால்நடையாக யாழ் நகரை நோக்கி வந்தபோது தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிரடிப் படைப்பிரிவொன்று மணிக்கூண்டு வீதியில் வைத்து தாக்குதலை மேற்கொண்டனர். எமது தாக்குதலிற்கு முன் நிற்கமுடியாத இராணுவத்தினர் கோட்டை முகாமிற்குள் சென்று பதுங்கிக் கொண்டனர் இதனைத் தொடர்ந்து எமது அதிரடிப்படை யாழ கோட்டையை சுற்றி வளைத்து தாக்குதலை மேற்கொண்டனர். கோட்டை முகாமிலிருந்த பாதுகாப்பு மையம் ஒன்றினை நோக்கி RPG கொண்டு தாக்கியதில் அது முற்றாக சேதமடைந்தது அதிலிருந்த இராணுவத்தினர் அனைவரும் கொல்லப்பட்டனர்.

**08-04-86** : யாழ் மாவட்டத்திலுள்ள தொண்டமானாறு இராணுவமுகாமினுள் அணி நடைபயிற்சியளித்துக் கொண்டிருந்த இராணுவ உயரதிகாரி மீது விடுதலைப்புலிகள் பதுங்கியிருந்து தாக்கியதில் அவ்வுயரதிகாரி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். புலிகளின் துப்பாக்கி பிரயோகத்தில் மேலும் சில இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

**10-04-86** : திருகோணமலை மாவட்டத்திலுள்ள சிறிமாபுரம் என்னுமிடத்திற்கு பல வாகனங்களில் இராணுவத்தினர் வந்துகொண்டிருந்தபோது, முன்னால் வந்த பேருந்து வண்டியிலிருந்து இறங்கி நடந்து வந்துகொண்டிருந்த இராணுவத்தினர் மீது எமது விடுதலைப்படை கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டதில் 8 இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். இதனையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கி விட்டனர். தாக்குதலை மேற்கொண்ட எமது அணி பத்திரமாக தளத்திற்கு திரும்பியது.

**11-04-86** : சேனையூர் (திருகோணமலை மாவட்டம்) எனுமிடத்திற்கு முப்பதிற்குமதிகமான இராணுவத்தினர் கால்நடையாக வந்தபோது, எமது கெரில்லாப்படை அதிரடித்தாக்குதலை மேற்கொண்டது. இராணுவத்தினரின் மீது RPG, மற்றும் நவீன ஆயுதங்களால் தாக்கியதில் 6 இராணுவத்தினர் அதே இடத்தினில் கொல்லப்பட்டனர். எமது தாக்குதலிற்கு முகம் கொடுக்க முடியாத இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

**12-04-86** : தமிழ் மக்களிற்கு பெரும் தொல்லைகள் கொடுத்துவரும் சிங்கள ஊர்காவல் படையைச் சேர்ந்த இருவர் எமது தோழர்களால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியாவில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இச் சிங்கள ஊர்காவல் படையினர் இராணுவப் பயிற்சகளை முடித்துக்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

**14-04-86** : திருகோணமலையில் வாழும் அப்பாவி இஸ்லாமியர்கள் மீது தாக்குதலை நடாத்தி தமிழ்ப் போராளிகள் இஸ்லாமிய மக்களை கொன்று குவிக்கின்றார்கள் என்ற பொய்ப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிடும் நோக்குடன் சுமார் 20 சிங்கள இனவாத அரசின் கூலிப்படையினர் தமிழ்ப் போராளிகள் போல வேடம் பூண்டு சென்றுகொண்டிருந்தனர். தகவல் அறிந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அப்பாவி இஸ்லாமிய மக்களை தாக்கச் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினரை இடைவழியில் மறித்து கடுமையாகத் தாக்கினர் எமது தாக்குதலிற்கு முன் நிற்கமுடியாத இராணுவத்தினர் புறமுதுகு காட்டி ஓடிவிட்டார்கள். எமது வீரஞ்செறிந்த தாக்குதலில் ஒரு இராணுவ வீரர் பலியானதுடன் ஒரு இராணுவ வீரர் படுகாயமடைந்தார்.

5ம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**15-04-86** : மட்டக்களப்பு பிராந்தியத்தில் சிங்கள இராணுவத்தினரின் அட்டகாசங்கள் அதிகரித்து வருகின்றன. எனவே அரச கூலிப்படையினரின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான பதில்த் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றார்கள். இன்று காலை 10 மணியளவில் மட்டக்களப்பு—கொழும்பு பிரதான பாதை வழியாக வாகரை இராணுவ முகாமிலிருந்து 3 வாகனங்களில் வந்த இராணுவத்தினரிற்கு, வாகரை முகாமிலிந்து சுமார் 5km தூரத்திலுள்ள மியாந்தர் என்ற இடத்தில் கண்ணிவெடித் தாக்குதலை விடுதலைப் புலிகளின் கெரில்லா அணியினர் மேற்கொண்டனர். இத்தாக்குதலில் இராணுவத்தினர் வந்த வாகனமொன்று முற்றாக சேதமடைந்தது. இவ்வாகனத்தில் பிரயாணம் செய்த பன்னிரு இராணுவத்தினரில் ஒரு உயர் இராணுவ அதிகாரியுட்பட 6 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மிகுதி 6 இராணுவத்தினர்களது நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளது. இறந்த காயமடைந்த இராணுவத்தினரை உடனடியாக கொழும்பு மருத்துவமனைக்கு கெலிகப்டர்மூலம் கொண்டு சென்றுள்ளனர். தாக்குதலை வெற்றிகரமாக முடித்த எமது கெரில்லா அணி பத்திரமாக தளத்தை வந்தடைந்தது.

கெரில்லா போராட்டத்தின் மூலம், ஒரு அடக்குமுறை ஆட்சியிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளும் மாபெரும் சக்தி மக்களுக்குண்டு.

—சேகுவாரா

**தமிழீழம் மலரும்வரை போராடுவோம்!**

தமிழினத்தை கூறுபோட முயலும் சுயநல அரசியல்வாதிகளுக்கு
__இஸ்லாமியத் தமிழ் மாணவர்கள் பதிலடி.__

தமிழ் தேசிய இனத்தை முஸ்லீம் – தமிழ் எனப்பிரித்து மதரீதியில் சண்டையை மூட்டிவிடும் சிங்கள ஆதிக்கவாதிகளுக்கு துணையாக செயற்பட்டு வரும் போலி இஸ்லாமியத் தமிழர்களுக்கு மட்டக்களப்புபல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இஸ்லாமியத் தமிழ் மாணவர்கள் சாட்டையடி கொடுத்துள்ளனர்.

ஏற்கனவே சிங்கள அரசினதும், ஆட்சியாளரினதும் திட்டமிட்ட சதி முயற்சி காரணமாக மட்டக்களப்பில் வெடித்த இஸ்லாமியத் தமிழர்களுக்கும் ஏனைய தமிழர்களுக்குமிடையிலான கலவரத்தைக் காரணம் காட்டி மட்டக்களப்புபல்கலைக்கழகக் கல்லூரியில் ஏனைய தமிழர்களுடன் கல்விபயிலும் இஸ்லாமியத் தமிழ் மாணவர்களுக்கு பாதுபாப்பு இல்லையென்றும் வேறு பாதுகாப்பான இடத்திற்கு மாற்றுமாறும் போலி இஸ்லாமிய அரசியல் தலைவர்கள் ஒன்று கூடி சிங்கள அரசிற்கு கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் மட்டக்களப்புபல்கலைக்கழகக் கல்லூரியில் 3 ஆண்டுகளாகக் கல்விபயின்றுவரும் மாணவர்கள் அனைவரும் சேர்ந்து "மட்டக்களப்புபல்கலைக்கழகக் கல்லூரியில் இஸ்லாமியமாணவர்கள் ஏனைய தமிழ் மாணவர்களுடன் ஐக்கியமாகவே வாழ்ந்து வருகின்றோம். எங்களுக்குள் இருக்கும் ஐக்கியத்திற்கு பங்கம்வர அனுமதிக்கமாட்டோம். இனப்பிரச்சனையால் இஸ்லாமியத் தமிழ் மாணவர்களும் ஏனைய தமிழ் மாணவர்களும் ஒரே வகையாகத்தான் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். எமக்குப் பாதுகாப்பு இல்லை எனக்கூறும் அரசியல்வாதிகளின் மாயாஜாலத்தில் இஸ்லாமியத் தமிழர்களும், மாணவர்களும் மயங்கிவிடக்கூடாது, ஏமாந்துவிடக்கூடாது" என்று ஏகோபித்தகுரலில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

********

இயக்கம் என்ற பெயரில் இஸ்லாமியத் தமிழர்களுக்கு இடையூறு தராதீர்!
__விடுதலைப்புலிகள் எச்சரிக்கை__

இயக்க நடவடிக்கை, இயக்கத் தேவை என்ற காரணங்களைக்கூறி இஸ்லாமியத் தமிழர்களின் உடமைகளுக்குச் சேதம் விளைவிக்கவோ, அவர்களின் வாகனங்களைக் கடத்தவோ கூடாது என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஏனைய இயக்கங்களை வலியுறுத்தியிருக்கின்றது. இது சம்பந்தமான அறிவுறுத்தல் சுவரொட்டிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டக்களப்புமுழுவதும் பரவலாக ஒட்டியுள்ளது.

அதே நேரம், இஸ்லாமியத் தமிழர்களுடன் சகோதர உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், அவர்களுக்கு ஏற்படும் துன்பதுயரங்களில் பங்குபெறுவதுடன் பொது எதிரிக்கெதிராக ஒன்றிணைந்து போராடுவோம் என்று மக்களைக் கோரும் துண்டுப் பிரசுரங்களை ஏராளமாக மக்கள் மத்தியில் விநியோகித்துள்ளனர். அப்பிரசுரத்தில் எதிரியின் பிரித்தாளும் தந்திரத்திற்கு பலியாக வேண்டாம் என்று இஸ்லாமியத் தமிழர்களைக் கேட்டு இருப்பதுடன் இயக்கம் என்ற பெயரில் இஸ்லாமியத் தமிழர்களை துன்புறுத்த முனைவோருக்கு எதிராக தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

*****

www.tamilarangam.net



# விடுதலைப் புலிகளின் வீரவாழ்வு

அங்கே இருக்கக்கூடிய மக்கள் எல்லோருக்கும் ஒரு உணர்வு இருக்கிறது.

இவ்வளவு மக்கள் அங்கே செத்துக்கொண்டிருக்கும்போது —இந்தியா உதவவில்லை; வேடிக்கை பார்க்கிறது.

இந்தியா தன்னுடைய அரசியல் லாபத்தை முக்கியமாகக் கருதுகிறதே தவிர, அது மனிதாபிமான உணர்வோடுகூட நமக்கு உதவிட முன்வரவில்லை என்ற ஒரு ஆதங்கம் அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு நிறைய இருக்கிறது.

### ராஜீவ்மீது அவநம்பிக்கை

இந்திரா காந்தி வகுத்த பாதையிலிருந்து ராஜீவ் காந்தி விலகிச் செல்கிறார் என்றும் அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

பிரேமதாசாவும், ராஜீவ் காந்தியும் லண்டனில் சந்தித்துப் பேசியதை அங்கே கொழும்பு டி.வி.யிலே ஒளி பரப்பினார்கள். எனக்கும் அதைப் பார்ப்பதற்கு அங்கிருந்தபோது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

அதிலே, இலங்கை இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா எல்லா உதவிகளையும் செய்யும் என்று ராஜீவ் காந்தி சொன்னதைத் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்கள்.

இங்கே இருக்கிற பத்திரிகைகளில் அந்தப் பெரிதாகப் போடுகிறார்கள்.

ராஜீவ் காந்தி இந்தியாவின் பிரதமர் என்ற பொறுப்பிலே உள்ளதால், அவர் சொல்லுகிற வார்த்தையும் இந்திய மக்களை எப்படிப் பாதிக்கும், மற்றவர்களையும் எப்படிப் பாதிக்கும் என்பதை உணராமல் பேசியிருக்கிறார். அவர் பேசியிருக்கிற அந்தப் பேச்சு அங்கே ஒளி பரப்பப்பட்டபோது அங்கே வாழுகிற மக்கள் எவ்வளவு வேதனை அடைந்தார்கள் என்பதை என்னாலே உணர முடிந்தது!

இவர் சொல்லுகிற இந்தச் சொல்லின் விளைவாக சிங்களவர்கள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டார்கள். இனி இந்தியா விடுதலைப் போராளிகளுக்கு உதவி செய்யாது, ஆகவே, தம் இஷ்டத்திற்கு எதுவேண்டுமானாலும் செய்து தமிழர்களைக் கொன்று குவிக்கலாம்



## மக்களோடு புலிகள்

என்று — அந்த அர்த்தம் தொனிக்கும்படியாக அன்றைக்கு டி. வி. யிலே ஒளிபரப்பப்பட்டதை நானே பார்த்தேன்.

விளைவுகளைத் தெரிந்து அவர் பேசுகிறாரா என்பது எனக்குத் தெரியாது.

அந்த டி. வி. பார்த்துக் கொண்டிருந்த வேளையிலே ஒரு அம்மையார் சொன்னார்:

'இந்திரா காந்தி இருக்கும்போது, இலங்கையிலே நடப்பது இனப் படுகொலை அதைப் பார்த்துக்கொண்டு இந்தியா சும்மாயிருக்காது.' என்று அங்கே சொன்னார். மறுநாள் கலவரங்கள் இங்கே ஓய்ந்தன.

இன்றைக்கு ராஜீவ் காந்தி சொல்லியிருக்கிற இந்த வார்த்தையின் விளைவாக 'நாளைக்குப் பெருமளவில் சிங்களவர்கள் வெறிகொண்டு எங்களுடையமக்களை அழிக்கப் போகிறார்கள்.' என்று அந்த அம்மையார் சொன்னார்.

மறுநாள், மட்டக்களப்பிலே, திரிகோண மலையிலே அப்படியே நடந்தது. நம்முடைய மக்கள் சாகடிக்கப்பட்டார்கள்.

மக்கள் மனநிலை என்பது அங்கே ரொம்பவும் தெளிவாக இருக்கிறது.

### 30 ஆண்டாய்

ஒன்று, அவர்கள் சமரசப் பேச்சை விரும்பவில்லை. முப்பதாண்டு காலமாக நாங்கள் பேசிப் பேசிப் பார்த்தாகிவிட்டது. முப்பதாண்டு காலமாக நாங்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே, எந்தக் காலகட்டத்திலும் நாங்கள் சமரசப் பேச்சை விரும்பவில்லை.

இரண்டாவது, "தமிழ் ஈழம்" தவிர அவர்கள் வேறு எதற்கும் தயாராக இல்லை.

ஒவ்வொரு குடும்பமும் இழப்புக்கு ஆளான குடும்பம். அந்த நிலையிலும்கூட, ஒரு குடும்பத்திற்கு ஒரு பவுன், ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆண் மகன் என்ற விதத்திலே அவர்கள் "விடுதலைப் புலி" இயக்கத்திற்கு அளித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

சில இடங்களில் நானே பார்த்தேன். முகாம்களிலே உள்ள விடுதலைப் புலி தோழர்களுக்கு அந்த ஊரே கூடி சோறு போடுகிறது. முறை வைத்துக்கொண்டு ஒவ்வொரு வீட்டிலிருந்தும் சோறு அனுப்புகிறார்கள்.

"நம்முடைய பிள்ளைகள் நமக்காகப் போராடுகிறார்கள்' என்ற உணர்வோடு அந்த மக்கள் அந்தப் போராளிகளுக்கு உதவுகிறார்கள். அவர்கள் என்ன இழப்புக்கும், கஷ்ட நஷ்டங்களுக்கும் ஆளானாலும் போராளிகளுக்கு எந்தக் கஷ்டமும் வரக்கூடாது என்று நினைக்கிறார்கள்.

மக்கள் கொடுக்கிற ஆதரவோடு, அவர்கள் தங்கள் இயக்கத்தை மேலும் வலுவாக்குவதை நான் அங்கே பார்த்தேன்

### புலிகள் தரும் கல்வியுதவி

கல்வி முற்றிலுமாகச் சீர்குலைந்த நிலையிலே, ஒற்றை ஆசிரியர் பள்ளிகளைக் கிராமம் கிராமமாக ஏற்படுத்துகிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் அருகிலுள்ள முகாம்களிலிருந்து விடுதலைப் புலிகள் பகல் காவலுக்கு வருகிறார்கள். இரவுக் காவலுக்கு ஒவ்வொரு ஊருக்கும் 5 பேர் அல்லது 10 பேர் ஆயுதங்களோடு அனுப்பபடுகிறார்கள். அவர்கள் வந்து ஊர் மக்களைப் பாதுகாக்கிறார்கள்.

துப்பாக்கி ஏந்தும் வேலையை மட்டும் அந்த இளைஞன் செய்யவில்லை. அவன் பல்கலைக் கழகத்திலே எம்.ஏ., அல்லது எம்.எஸ்.சி. அல்லது பி. ஏ., அல்லது இன்ஜினியரிங் படித்துக் கொண்டிருக்கிற மாணவனாகத்தான் இருக்கிறான். அவன்தான் துப்பாக்கி ஏந்தி ஊருக்கு வருகிறான்.

7ம் பக்கம் பார்க்க

www.tamilarangam.net



6ம் பக்கத் தொடர்ச்சி..

ஊர் மக்களைப் பாதுகாக்கும் வேலையோடு, ஊர்ப் பிள்ளைகளுக்கும் படிப்புச் சொல்லிக் கொடுக்கிற வேலையையும் அந்த வீரன் செய்கிறான்.

ஒரு தலைமுறை வீணாகி விடக்கூடாது என்ற உணர்வின் காரணமாக ஒற்றை ஆசிரியனாக இருந்து அங்குள்ள பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறான்.

அதேபோல, விவசாயிகளுக்கு உதவியாகவும் அவர்கள் இருக்கிறார்கள். விவசாயிகள் வயலில் உழும்போது மேலே ஹெலிகாப்டரிலிருந்து சுடாமல் இருக்க அவர்களுக்குப் பாதுகாப்பாக வந்து நிற்கிறார்கள். உழுவதற்கு உதவி செய்வதோடு விதைகள், உரங்களெல்லாம் அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கிறார்கள்.

உடைந்த குளங்களையெல்லாம் மக்களைத் திரட்டிக் கொண்டு அங்கே வந்து சீர்படுத்துகிறார்கள். அங்கே ரணமடு என்ற மிகப் பெரியதோர் ஏரியை ராணுவம்வெடிவைத்து உடைத்திருக்கிறது. விடுதலைப் புலிகள் மக்களைத் திரட்டிக் கொண்டுபோய் அந்த உடைப்பை அடைத்திருக்கிறார்கள். மீண்டும் பாசனம் செய்வதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள்.

கள்ளச் சாராய ஒழிப்பை அவர்கள் ஒரு பெரிய இயக்கமாகவே நடத்துகிறார்கள். 'கசிப்பு' என்று அதற்குப் பெயர். எங்கே பார்த்தாலும் கள்ளச் சாராயத்திற்கு எதிரான சுவரொட்டிகள். மது நம்முடைய உணர்வையும், சுதந்திரத்தையும் அழிக்கும் என்ற பிரச்சாரத்தைச் செய்கிறார்கள்.

அங்கே சென்று பார்த்தபோது ஒரு ஆச்சரியம் எனக்கு. எந்தச் சினிமாச் சுவரொட்டியையும் நான் எந்தச் சுவரிலும் பார்க்கவில்லை.

தமிழ்நாட்டின் சுவர்களிலே சினிமாச் சுவரொட்டிகளைத் தவிர வேறு எதையும் பார்த்துப் பழக்கப்படாத என் விழிகளுக்கு அது ரொம்பவும் ஆச்சரியமாக இருந்தது.

இதுபோன்ற பிரச்சார சுவரொட்டிகள் அல்லது விடுதலைப் போரிலே இறந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிற சுவரொட்டிகள் - இவைகளைத்தான் அங்கே பார்த்தேன்.

கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு அவர்கள் பிரச்சாரத்தோடு நிற்கவில்லை. ஒரு ஊரிலே ஏறத்தாழ 350 பேர் இந்தத் தொழிலிலேயே ஈடுபட்டவர்களாக இருந்திருக்கிறார்கள்.

**மறுவாழ்வு**

அந்தக் கிராமத்தைச் சுற்றி வளைத்து அவர்களையெல்லாம் பிடித்து உட்கார வைத்து "நீங்கள் இந்தத் தொழிலிலே ஈடுபடக்கூடாது" என்று சொல்லி அந்தச் சாதனங்களையெல்லாம் அழித்ததோடு அந்த 350 பேருக்கும் வேறு வேலை கொடுத்திருக்கிறார்கள். வேறு வேலை கொடுத்தால் அந்தத் தொழிலுக்குத் திரும்பச் செல்லமாட்டார்கள் என்பதை அறிந்து அப்படிச் செய்திருந்தார்கள்.

நம்முடைய நாட்டில் அவனுடைய தொழிலை அழித்து விட்டு அவன் வைத்திருக்கும் பணத்தை பிடுங்கிக்கொண்டு செல்வதும், பிறகு போலீஸ்காரன் அந்தப் பக்கம் போனதும் இவன் தொழிலை மீண்டும் செய்வதுபோல் அவர்கள் செய்யவில்லை.

நான் முதலில் சொன்ன பல்வேறு தொழில்களில் சிலவற்றை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து, அவர்களைத் திருத்தி மனிதராக்கியிருக்கிறார்கள்.

வெறும் விடுதலை வீரர்களாக மட்டுமல்லாமல், சமுதாயத் தொண்டர்களாகவும், அந்தத் தோழர்கள் அங்கே விளங்குவதை என்னாலே பார்க்க முடிந்தது.

நம்முடைய பழமையான கலைகளுக்கு, புதிய வடிவத்தை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். வில்லுப் பாட்டு, பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆகியவை மூலம் அவர்கள் அங்கே பிரச்சாரம் செய்வதை நான் பார்த்தபோது - எனக்கே ஆச்சரியமாக இருந்தது. ஓ! இதன் மூலமெல்லாம் கூட பிரச்சாரம் செய்ய முடியுமா என்று வியந்தேன். அந்த அளவிற்குச் செய்கிறார்கள்.

நம்முடைய கலைகளிலே— நாட்டு மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டக்கூடிய கலைகளாகச் செய்கிறார்கள். கீழ்த்தரமான உணர்ச்சியை ஊட்டாத கலைகளாக இருக்க வேண்டுமென்பதிலே அக்கறை செலுத்துகிறார்கள்.

அங்கே வாழக்கூடிய மக்கள் -தமிழ் ஈழம் தவிர வேறு எதற்கும் தயாராக இல்லை. இல்லவே இல்லை. யார் என்ன சொன்னாலும் அவர்கள் அந்த உறுதியிலேயிருந்து கொஞ்சமும் மாறாதவர்களாகத்தான் இருக்கிறார்கள். தொடர்ந்து இறுதி வரை போராடுவார்கள்.

மதிப்பிற்குரிய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இந்த உண்மையை உணரவேண்டும்.

# தமிழீழமொன்றே நம் தாரக மந்திரம்!
# தம்பி பிரபாகரனே தமிழீழக்காவலன்!

## தங்கச்சி நீ ஒரு... தமிழச்சி

அடிவே...எனது...தங்கச்சி...
அன்பைச் சொரியும்...தங்கச்சி...
'அடிமை' இல்லை...தமிழச்சி...
இதுதான் எங்கள்...தனிக்கட்சி!

விடுதலைக் கோஷம்...விண்வரை ஓங்கும்!
ஒருதமிழ்த்தாயின்...கண் மழை பெய்யும்
உயர்ந்தவர்...தாழ்ந்தவர்...எனும் பிணியின்றிப்...
பெருமைகள் கொண்டே...தமிழினம்...உய்யும்!

ஊரினைக் கூட்டிச்...சீரினைக் கேட்கும்---
உதவாக் கரைகள்...இனியில்லை!
ஊர்வலம் வந்து...அடிமைகள் வாங்கும்...
திருமணக் கோலம்...இனியில்லை!

காசினைப் பறித்துச்...சேலையைக் கொடுக்கும்...
தாசியர்...உலகில்...இருக்கின்றார்!
காசினைக் கொடுத்துக்...காதலைப் பொழியும்..,
கன்னி...நீயென்றே...நினைக்கின்றார்!

முத்தங்கள் கோடி...சத்தியங் கோடி...
பைத்தியம் போலவர்...தருகின்றார்!
முத்தையும்...பொன்னையும்...முழுப்படி பார்த்ததும்.
வித்தைகள் காட்டி...மறைகின்றார்!

நிலத்தையும்..,பொன்னையும்...மனத்தினில் வைத்தே
உனைச் சிறை கொள்ளும்...முகங்கண்டால்,..
பலத்தை நீ...திரட்டி...எதிர்த்திடவேண்டும்...
தவிர்த்திட வேண்டும்...சினங் காட்டி...

ஆணெனப் பிறந்த...ஒரு நிலைக்காக...
ஆயிரங் கேட்கும்...பலபேடிச்
சாணிகள்...இவரைச்...சாடி...உனக்குக்
கோழையின் தாலி...விழவேண்டாம்!

தாய்மையைத் தவிர்ந்த ஏனைய யாவும்.,.
சமத்துவ மென்றே...அறைகூவு...
தாய்மையைக் கூட...வீதியில் எறியும்...
சமத்துவ மென்றால்...அடிபோடு!

— ( [illegible] ) —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



12ம் பக்கத் தொடர்ச்சி

# விடுதலைப் புலிகளின் தளபதி பிரபாகரனுடன் சிறப்பு பேட்டி!

me to take up arms. I felt outraged at the inhuman atrocities perpetrated against an innocent people. The ruthless manner in which our people were murdered, massacred, maimed and the colossal damage done to their property made me realize that we are subjected to a calculated programme of genocide. I felt that armed struggle is the only way to protect and liberate our people from a totalitarian Fascist State bent on destroying an entire race of people.

■ *But don't you think that you could have expressed your grievances within the framework of parliamentary democracy and within the confines of a free press?*

**PRABHAKARAN**: The Tamil people have been expressing their grievances in Parliament for more than three decades. Their voices went unheard like cries in the wilderness. In Sri Lanka there is no parliamentary democracy where our people could effectively represent their aspirations. What passes as Parliament in Sri Lanka is an authoritarian rule founded on the tyranny of the majority. The Tamil representatives were finally banned from Parliament. There is no freedom of the press in Sri Lanka. The press is State controlled and is manned by chauvinistic journalists. The Tamils could not find any democratic institutions to air their grievances.

■ *Did you also try to win popular support and that of the Sinhalese people?*

**PRABHAKARAN**: We do aspire to the support of the Sinhalese people. Our cause is fair and legitimate, but we are unable to mobilize the Sinhalese people in our favour because of the chauvinistic politicians and the Buddhist clergy who have been poisoning their minds against the Tamils. Yet we will continue to struggle to convince the Sinhalese people of the legitimacy of our cause.

■ *Don't you think that the Sinhalese and the Tamil masses have the same socio-economic aspirations, despite the present divide?*

**PRABHAKARAN**: Yes, that is true. Both the common Sinhala and Tamil masses are oppressed and exploited and they have similar socio-economic problems and aspirations. What divides them is the national conflict. The Sinhala ruling classes have generated this national contradiction to divide the Sinhala and Tamil masses to reinforce their political power.

■ *What were the conditions that influenced you to join the militant ranks?*

**PRABHAKARAN**: From a very young age I was told of horrifying stories of brutal atrocities committed against the Tamil people. During my student days I felt the racial discrimination directly. In my early youth I had a clear picture of the nature of State oppression, which was engulfing the Tamil nation. I then realized that to redeem our people one must organize an armed resistance movement. That is how I founded the Tiger movement and got involved in the armed struggle.

■ *What is your family background and your relationship with your parents? Are you in touch with them?*

**PRABHAKARAN**: I come from a very ordinary family. My father was a Government servant; I have two elder sisters who are now married and settled. From my very early youth, I was drawn into revolutionary politics and became a "wanted" person. When I was 19 years old I left home and went underground. Ever since I have lost contact with my parents.

■ *You are normally projected as a symbol of Tamil militancy. Even your own organization projects you as a big hero. As a radical, how do you justify this individual hero worship?*

**PRABHAKARAN**: I cannot help this kind of projection and characterization. I am only concerned with the political liberation and social emancipation of our oppressed people. My people are aware of my commitment and trust me to lead them on the right path. That is why they show great affection. These projections may be expressions of people's love.

■ *How do you assess the present situation in Sri Lanka?*

**PRABHAKARAN**: The present political situation in Sri Lanka is very critical. The Tamil nation is facing a genocidal onslaught. The Sri Lankan Armed Forces are continuing their rampage on the Tamilian masses. Our people are subjected to massacres, mass arrests, arson, looting and rape. Thousands of them are uprooted from their traditional homelands and made refugees. Under the guise of a cease-fire, the Sri Lankan State has embarked on a policy of ruthless repression, military domination and annihilation of our people. The present chauvinistic Sinhala leadership has no genuine interest in bringing about a fair and just solution through peaceful negotiations, but is committed to militarily subjugating the Tamil people. Such a policy has made the present situation very critical and dangerous.

■ *How do you view the present pace of negotiations betweeen the Sri Lankan Government and the representatives of the Tamil people?*

**PRABHAKARAN**: The peace negotiations have been a futile exercise. This is a drama enacted by the Jayewardene Government to deceive the world. Although Jayewardene poses as a lover of peace, he does not desire a peaceful settlement. So far he has failed to offer any substantial proposals that would satisfy the political aspirations of our people. Under the façade of a peace process he has unleashed military terror aimed at the genocidal destruction of our people.

■ *Some time ago you charged that the Jayewardene Government utilized the cease-fire agreement to consolidate its military position.*

**PRABHAKARAN**: Certainly, under the guise of the cease-fire agreement, the Jayewardene Government embarked on a massive militarization programme. The Government is spending a huge amount of its national budget on building its military machinery. Lethal weapons of all sorts are being

TAMIL TIGERS UNDERGOING BATTLE TRAINING IN JUNGLE WARFARE AT A CAMP IN SRI LANKA.

9ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## INTERVIEW

purchased on a large scale. The Government has introduced legislation for conscription. The whole Sinhala nation is being mobilized on a war footing. New Army camps have been constructed in the Tamil areas. Foreign mercenaries as well as Pakistan provide training to Sinhalese soldiers in counter-insurgency warfare. The massive military mobilization clearly shows that Jayewardene is bent on a military solution rather than being committed to the peace process of a negotiated settlement.

■ *The last time you came to Delhi you achieved a major political concession, in that the Sri Lankan Government agreed to constitute monitoring committees to investigate instances of cease-fire violations. Has the setting up of such committees helped to promote a more congenial atmosphere for controlling the violations?*

**PRABHAKARAN:** *(Visibly irritated.)* What monitoring committees are you talking about? Have they published a single report? Have they investigated a single instance of cease-fire violation by the rampaging armed thugs of J.R.'s regime? The truth is that he has bought more gunboats from Singapore to kill our fishermen. The truth is that while the talks are going on he is murdering more and more civilians. The Armed Forces, along with the Navy and the Air Force, have conducted military operations.

■ *So for all practical purposes, do you think that the peace process has failed?*

**PRABHAKARAN:** Well, talks so far have failed to bear any positive results.

■ *Does it mean that now there is no possibility of any negotiated settlement to the problem?*

**PRABHAKARAN:** It depends...

■ *On India's position?*

**PRABHAKARAN:** In a sense, yes.

■ *But are you optimistic that there is a chance of a negotiated settlement to the problem so as to avoid further bloodshed?*

**PRABHAKARAN:** Past experience and history show that J.R. won't come to a genuine settlement. He is staging this drama to show that he is a peaceful man. The Indian Government has not achieved the desired results because of the stringent attitude of the Jayewardene Government. In this atmosphere we have come to a dead end, but India might try to bring both sides together. India must try harder.

■ *Did you say so to Romesh Bhandari during your talks with him?*

**PRABHAKARAN:** Yes, we did.

■ *There was a press report some time ago that said militants had attacked some Sinhala civilians. What is your policy towards civilians in the armed conflict?*

**PRABHAKARAN:** There was no truth in those reports. They are spreading these lies to malign the liberation movement. We were not involved in the incidents of Namalwatte nor do we know if any of our fraternal organizations were involved. We have never touched civilians. It is only when they attack our people that we protect them.

■ *I was once shown pictures of civilians allegedly attacked by the militants by the Public Relations Officer of the Sri Lankan High Commission in New Delhi.*

**PRABHAKARAN:** Look, they have got these Home Guard thugs who are armed and trained by the Armed Forces. They dress like civilians but are almost like death-squads let loose on Tamil civilians now and again — to loot, burn, destroy. In some cases we have attacked them. They look like civilians. In some areas there are Sinhalese-Tamil civilian conflicts. These conflicts take place when the Sinhalese are brought to the Tamil areas to forcibly occupy the land. Clashes do take place to protect the land. I know that the J.R. regime's propaganda managers use the pictures of such incidents to say that the militants have attacked the civilians. But they don't tell the truth.

■ *So you have nearly agreed that the talks have come to a dead end and that till they are revived the chances of a peaceful settlement are very thin. In the interregnum, what will be your strategy? Are you planning to revive your guerrilla operations against the Armed Forces?*

**PRABHAKARAN:** There is no war at the moment. We only defend ourselves when we are attacked. We will never go on the offensive.

■ *There were also some reports of the Sri Lankan Army's efforts to drive the Tamil peasants out of the Trincomalee districts and allow Sinhalese settlements in their place. What will be your stand if these reports are true?*

**PRABHAKARAN:** We have no other option but to fight back. We will effectively fight back and foil their plans.

■ *Are you satisfied with India's approach towards the Tamil problem and her role as a mediator between the two sides?*

**PRABHAKARAN:** As a mediator, India is making genuine efforts to bring about a settlement to the ethnic conflict through a peace dialogue. We are satisfied with India's approach but we are deeply dissatisfied with Jayewardene's approach. The arrogant and intransigent attitude of Jayewardene has become a stumbling block in India's sincere efforts to find a fair solution to the Tamil problem.

■ *If that is so, why did the militant groups stage a walk-out in Thimphu?*

**PRABHAKARAN:** We staged a walk-out because of the escalation of military terror and genocide against our people. I think a similar situation still prevails in Sri Lanka.

■ *You have, time and again, said that the Tamil crisis in Sri Lanka affects the Indian interests in the subcontinent. Do you say this only to muster support for your own cause?*

**PRABHAKARAN:** What was once an internal conflict has now assumed the dimensions of an international problem, which is causing grave concern to India. In pursuing a ruthless policy of repressing the Tamil freedom movement, Sri Lanka has been inducting into the island foreign forces of subversion. The penetration of the Israeli intelligence agencies, the induction of British mercenaries, the involvement of Pakistan and the massive militarization programme have disturbed the peace and stability in the region. This dangerous development will certainly affect the geo-political interests of India, whose committed policy is to make the Indian Ocean a zone of peace.

■ *What role do you think the US Administration is playing in the present conflict in Sri Lanka?*

**PRABHAKARAN:** The US Administration has strategic and geo-political interests in the region. Sri Lanka, with its natural harbour in Trincomalee, is most strategically located in the Indian Ocean. The objective of the US imperialists is to gradually penetrate the country and eventually bring the island under its sphere of influence and domination. The escalating ethnic conflict has driven the Jayewardene Government to seek American assistance. The US has been directly helping Sri Lanka through her allies, i.e. Israel, Pakistan, South Korea and China. The US objective seems to be to perpetuate and escalate the ethnic crisis, so that she can gradually set foot on the island and establish a base in Trincomalee.

■ *Do the socialist countries sympathize with your cause?*

**PRABHAKARAN:** Yes, they do sympathize with our cause.

■ *What is your political philosophy and which guerrilla leader inspires you the most?*

**PRABHAKARAN:** Revolutionary socialism is my political philosophy. By socialism I mean the construction of an egalitarian society where there is no class contradiction and exploitation of man by man; a free, rational society where human freedom and rights are protected and progress enhanced. Che Guevara is the guerrilla leader who inspires me the most.

■ *How do you classify the struggle of the Tamil people?*

**PRABHAKARAN:** I will categorize the struggle of the Tamil people as the struggle for the right to self-determination. It is the struggle for political emancipation, a struggle to determine their own political destiny.

■ *What is the historical background of the present ethnic conflict in Sri Lanka?*

**PRABHAKARAN:** The present ethnic conflict has a history of nearly four decades. Since the "independence" of the island from British colonial rule, the Sri Lankan ruling class adopted a disastrous policy of State repression against the Tamil people. The repression had the genocidal intent of destroying the

16 ம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ✱ மனிதருள் மாணிக்கம்

நேரம்:- பிற்பகல் 7 மணி.
இடம்:- நல்லூர் திருவிழாக்காக போக்குவரத்து தடைசெய்யப் பட்ட வீதியில்

ஈழம் பல்கலைக்கழக கலாச்சாரக் குழுவினர் விடுதலைப் பாடல்களை பாடிய வண்ணம். மக்களிடம் நிதி சேகரித்துக் கொண்டு வந்தனர். பக்தர்கள் சிலர் தம் மாலியன்ற உதவியைச் செய்ய, பலர் அவர்களை வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தனர்.

வீதியின் ஓரத்தில் மெலிந்த உருவம்; அழுக்கேறிய கிழிந்த உடை; நீண்ட நரைத்த தாடி; செம்பாடு படிந்த தலை முடி; ஒரு கையில் ஊன்றுகோல்; மறு கையில் நெழிந்த பாத்திரம்; வயது சுமார் 70இருக்கும்: பெயர், ஊர் தெரியாது. தனது பசியைப் போக்க அந்த வீதிக ளில் பிச்சை எடுப்பவர். எழும்பி வந்து தனது நெழிந்த பாத்திரத்திலிருந்த சில சில்லறைகளை எடுத்து கலாச்சாரக் குழு வினரின் உண்டியலுக்குள் போட்டு விட்டு மீண்டும் ஓரத்தில் போய் அமர்ந்தார்.
—அவ்வளவும் தான்!

## போராட்டத்தைக் காப்பாற்றுவோம்

இன்று தமிழீழப் பகுதிகளில் இடம் பெற்றுவரும் கொள்ளை, கொலை போன்ற நடவடிக்கைகள் எமது போராட்டத்தில் பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளன. கொள் ளைகள் பற்றிய கண்டனங்கள் பரவலாக எழுந்த போதும் இவை தொடர்கின்றன. எமது போராட்டத்தினை அழிப்பதற்காகத் திட்டமிடப்பட்ட ரீதியில் இவை நடாத் தபபட்டால் அச்சக்திகள் இனங்காணப் பட்டு மக்கள் முன்னிலையில் அம்பலப்படுத் தப்பட்டு அழிக்கப்படவேண்டும்.

ஆனால் எமக்குக் கிடைக்கும் தகவல் கள் மூலம் நிதிப்பற்றுக்குறையினை நிவர்த்தி செய்வதற்காக சில விடுதலை இயக்கங்க ளும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடு வதாக அறிய முடிகின்றது இவை கவலைக் குரியதும் கண்டனத்துக்குரியதும் உடனடி யாக நிறுத்தப்பட வேண்டியதுமான நட வடிக்கைகளாகும்.

ஏன் இந்த நிலை ஏற்பட்டது?

விடுதலை இயக்கங்கள் பொருளாதா ரத்தை ஒழுங்கான முறையில் திட்டமிடா மல் தங்களுடைய ஏனைய செயற்பாடுகளை விரிவுபடுத்தியமை, 83ம் ஆண்டு ஆடி மாதத்தின் பின ஏற்பட்ட விசுக நிலையி னூடாக ஏராளமானவர்கள் இயக்கங்களில் சேர்க்கப்பட்ட அதே நேரம் நீண்ட கால நோக்கில் பொருளாதாரததிற்கான அடித் தளம் அமைக்கப்படாமை போன்ற கார ணங்களால் இவற்றை முன்னுணர்ந்து செயற்பட்ட இயக்கங்களைத் தவிர ஏனை யவை பாரிய நிதிநெருக்கடியை எதிர் நோக்கின. விடுதலையில் கொள்ளை போன்ற நடவடிக்கைகள் ஏற்படுத்தும் பின்னடை வைப் பற்றிய எதுவித கவலையுமற்ற, நிதி நெருக்கடிக்குள்ளான இயக்கங்கள் இத்த கைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

**இதற்கான தீர்வு-**

இதற்கு தற்காலிகத் தீர்வேனும் காணப்படுவதற்கு இயக்கங்களின் நிதிப்பற்றுக் குறைநிவர்த்தி செய்யப்படுவது அவசியமானதாகும். நிதிப்பற்றுக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு இருவழிகளைக் கையாள முடியும்.

(1)வருமானத்தை அதிகரித்தல்.

(2)தேவையற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்தல்.

வருமானத்தை அதிகரிப்பதக்கு விடுதலை இயக்கங்கள் உற்பத்தி நடவடிக்கைக ளில் ஈடுபடுவது அவசியமானதாகும். இன்று அந்நியப் பொருட்களுக்காக எமது பணம் ஏராளமாக செலவிடப்படுகின்றது. உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதனூடாக அந்நியப் பொருட்களுக்குச் செலவிடப்படும் எமது பணத்தை எமது விடுதலைக் காகப் பயன்படுத்த முடியும்.

விடுதலை இயக்கங்களின் அங்கத்தவர் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் நடந்து தேவையற்ற செலவினங்களைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அதேசமயம் விடுதலை இயக்கங்கள் சரியான முறையில் அவற்றிற்குரிய பொருளாதாரங்களைத் திட்டமிட்டு அதற்கேற்றவாறு ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் இவற்றைப் பற்றி பொருட்படுத்தாது நிதிநெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்காக கொள்ளை போன்ற நடவடிக்கைகளை விடுதலை இயக்கங்கள் தொடருமானால் எமது போராட் டம் அழிக்கப்பட்டுவிடும். எனவே போராட்டம் காப்பாற்றப்பட வேண்டுமானால் அதற் குரிய நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டே யாக வேண்டும்.

## இயற்கையின் சீற்றத்தால் சிங்கள சிப்பாய்கள் சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள வாகரை ராணுவ முகா மில், ஒரு சிங்கள இராணுவ சிப்பாய், தனது பொறுப்பதி காரியிடம் விடுமுறை கேட்ட போது, அவர் விடுமுறை தர மறுக்கவே, மேற்படி சிப்பாய் மது அருந்திவிட்டு 8-3-86இல் கடலில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

கதிரைவெளி என்னுமிடத்தி லுள்ள சைவ சமயக்கோவில் ஒன்றுக்குள் இராணுவத்தினர் நுழைந்தபோது அங்கிருந்த நாகப்பாம்பு கடித்து, ஒரு இரா ணுவத்தான் துடிதுடித்து ஸ்த லத்திலேயே செத்தான். இச் சம்பவமும் 8-3-86இல் இடம் பெற்றது.

9-3-86இல் திருகோணமலையி லுள்ள கட்டைபறிச்சான் என் னும் இடத்தில் இடி விழுந்த தால், இரு சிங்கள ராணுவத் தினர் உயிரிழந்தனர். இருவர் படுகாயம் அடைந்தனர்.

மேற்படி கட்டைப்பறிச்சான என்னுமூரில், கடலில் சென்ற படகு கவிழ்ந்ததனால், அதில் சென்ற 5 இராணுவத்தினர் 10-3-86இல் கடலில் மூழ்கி இறந்துள்ளனர். ஒருவர் மட்டும் ஏ.கே. 47 துப்பாக்கி யுடன் நீந்திக் கரை சேர்ந்தார்.

### தற்கொலை!

தமிழீழ நாட்டில் பணியாற்ற முடியாது என்று மறுத்து வந்த சிங்களச் சிப்பாயான சுனில் சாந்த என்ற 22 வயதுடைய இளைஞரை, மேலதிகாரிகள், நிர்ப்பந்தித்துப் பணியாற்ற வேண்டுமென்று கட்டளை விதித்தபோது, விரக்தியடைந்த மேற்படி சிங்கள சிப்பாய் தற் கொலை செய்துகொண்டார். வவுனியா ஈரத் பெரிய குளம் எனுமிடத்திலுள்ள இராணுவ முகாமில் இச் சம்பவம் இடம் பெற்றது.

மட்டக்களப்பில் 6/5/86 வீரகேசரி

## 'டெலோ' இயக்கத்தவரை சரணடைய கோரிக்கை

### 2 வாகனங்கள் மீட்டு உரியவரிடம் ஒப்படைப்பு

மட்டக்களப்பு கிழக்கு மாகாணத்தில் 'டெலோ' இயக்கத்திற்கு எதிராக புலிகள் இயக்கம் மேற்கொண்ட நடவடிக்கை யில் இதுவரையில் 'டெலோ' இயக்கத்தைச் சேர்ந்த 11 பேர் மட்டும் சுட்டுக்கொல் லப்பட்டதாக அறியப்படு கிறது.

இதேவேளை மட்டக் களப்பு கிழக்கில் டெலோ இயக்கத்தவர்களை உடனடி யாக சரணடையுமாறு புலி கள் இயக்கம் கேட்டிருப்ப தாகவும் சொல்லப்படு கிறது. அத்துடன் சிலர் ஆயு தங்களுடன் சரணடைந்து விட்டதாகவும் புலிகள் இயக்கத்தினர் மட்டக்களப் பில் தகவல் வெளியிட்டுள்ள னர்.

இதேவேளை டெலோ இயக்கத்திடமிருந்து மீட்கப் பட்ட கார் ஒன்றும் மோட் டார் சைக்கிளும் உரியவர் களிடம் ஒப்படைக்கப்பட் டிருப்பதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அதே சமயம் காத்தான் குடி ப.நோ:கூ. சங்கத்தில் சமீபத்தில் இடம்பெற்ற கொள்ளையின் போது அப கரிக்கப்பட்ட பல பொருட் களில் ஒரு பகுதியும் மீட்கப் பட்டுள்ளதாகவும் அவ்விதம் மீட்கப்பட்டவை விரைவில் மேற்படி சங்கத்திடம் ஒப் படைக்கப்படும் எனவும் அறி விக்கப்பட்டுள்ளது.

வீரகேசரி.
வியாழக்கிழமை (1–5–1986)

முகாம்களை தேடி ஒழிக் கும் இந்த நடவடிக்கைள் குறித்து ஊர் மக்கள் எது வித அதிர்ச்சியோ ஆத்தி ரமோ கொண்டதாகக் காட் டிக்கொள்ளவில்லையாம்,

மாறாக சில இடங்களில் தேடி அழிக்கும் நடவடிக்கை களில் ஈடுபட்டோருக்கு குளிர்பானம் வாங்கிக் கொடுத்து உபசரித்ததாக சிலர் தெரிவித்தனர்.

சமீப காலமாக நடந்த தனியார் சொத்து கொள்ளை களைக் கண்டித்த பகுதி மக் களே இந்த உபசரிப்பில் கூடுதல் ஆர்வம் காட்டிய தாக சொல்லப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் பத்திரிகைகளில்

# விடுதலைப் பாதையிலிருந்து விலகும் இயக்கங்களைத் தடை செய்வோம்

4/5/86 வீரகேசரி.

## புலிகள் இயக்க யாழ். மாவட்ட தலைவர் விளக்கம்

(யாழ். அலுவலக நிருபர்)

விடுதலைப் பாதையிலிருந்து விலகிச் செல்லும் இயக்கங்களை தடைசெய்வதென்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொள்கைக்கு அமையவே இப்பொழுது "டெலோ" இயக்கத்தையும் தடைசெய்கிறோம் என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ். மாவட்ட தலைவரான கிட்டு அறிவித்துள்ளார்.

டெலோ முகாம் ஒன்றை அழிக்க விடுதலைப் புலிகள் இயக்க குழுவொன்று சென்ற போது பொதுமக்கள் பலர் அவர்களை எதிர்கொண்டு, தற்பொழுது வடக்கில் இடம் பெறும் இயக்க மோதல் குறித்து கேள்வி எழுப்பிய பொழுதே அவர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை மாலை யாழ். பிரதான வீதி தண்ணீர் தாங்கியடியிலுள்ள டெலோ முகாமை கைப்பற்றி அழித்த இக் குழுவினர், அங்கிருந்த பொருட்களைக் கைப்பற்றிய பொழுதே பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

விடுதலை இயக்கமென்ற பெயரில் விடுதலையுடன் தொடர்புடைய வேலையைச் செய்யாமல் தமிழ் மக்களின் தேட்டத்தைக் கொள்ளையடித்து வந்த தமிழீழ விடுதலை இராணுவத்தையும் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்துள்ளதென்றும் கிட்டு பொதுமக்களிடம் கூறியுள்ளார்.

"எமக்கு எந்த இயக்கத்தின் மீதோ அல்லது தனிப்பட்ட நபர் மீதோ குரோதமில்லை. தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக பாடுபட இயக்கம் ஆரம்பித்த நாம், தமிழ் மக்களின் அழிவுக்கோ வெறுப்புக்கோ காரணமாக இருக்க, எந்த ஒரு சக்தியையும் இந்த மண்ணில் அனுமதிக்க முடியாது" எனவும் கிட்டு கூறியுள்ளார்.

மக்களின் வேண்டுகோளையேற்றும் அவர்களின் கஷ்டத்தை உணர்ந்துமே நாம் இந்த துணிகர நடவடிக்கையில் இறங்கினோம். அதற்கு மக்கள் ஆதரவளித்து வருவதை நாம் நேரடியாக காணுகிறோம்" எனவும் கிட்டு கூறியுள்ளார்.

இதற்கிடையில் நேற்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வேட்டையைத் தொடர்ந்தது.

5/5/86 வீரகேசரி

# யாழ். குடாநாட்டில் இனம் புரியாத அமைதி!

# மீட்கப்பட்ட வாகனங்கள் யாழ்நகரில் வைத்து உரியவர்களிடம் ஒப்படைப்பு!

## வீதிகளில் புலி இயக்கத்தினர் காவல்; நடமாட்டமும் அதிகரிப்பு

(யாழ். அலுவலக நிருபர்)

யாழ். குடா நாட்டில் நேற்று இனம் புரியாத அமைதி நிலவியது. குண்டு வெடிப்பு சத்தங்களோ, வேட்டுச் சத்தங்களோ கேட்காத நிலையில் யாழ்நகரிலும் அதன் சுற்றுப் பிரதேசங்களிலும் அமைதி நிலவியது.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தோரின் நடமாட்டம் வீதிகளில் காணப்பட்டது. யாழ்நகரைச் சூழவுள்ள இடங்களில் ஆங்காங்கே நின்று வீதியில் செல்லும் வாகனங்களையும் அந்த இயக்கத்தினர் சோதனைக்குட்படுத்தினர்.

அதேவேளையில் கொடிகாமத்திலும் கைதடியிலும் விடுதலைப் புலிகளால் போடப்பட்ட வீதித் தடை நேற்றும் அகற்றப்படவில்லை. இதனால் யாழ்நகரிலிருந்து வெளியூர்களுக்கான இ. போ. ச. பஸ் சேவை உட்பட அனைத்து வாகனப் போக்குவரத்துக்களும் நேற்றும் நடைபெறவில்லை. எனினும் கொழும்பிலிருந்து புறப்பட்ட தனியார் பஸ் வண்டிகள் யாழ்ப்பாணத்தை வந்தடைய முடிந்தது.

# புலிகளின் "கண்காட்சியில்" வவுனியா வாகனங்கள்

6/5/86 வீரகேசரி.

(கேசரி நிருபர்)

வவுனியா கச்சேரிக்கு சொந்தமான ஜீப் வண்டி ஒன்றும், தற்போது புலிகள் இயக்கத்தால் 'டெலோ' இயக்கத்திடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பிரஸ்தாப ஜீப் வண்டியும் யாழ்ப்பாணத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாம். அத்துடன் வவுனியாவைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் 'எல்ப்' ரக வாகனங்கள் இரண்டும் டாக்டர் ஒருவருக்குச் சொந்தமான கார் ஒன்றும் மீட்கப்பட்டு அக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரஸ்தாப வாகனங்களை அத்தாட்சிப்படுத்தி பெறுவதற்காக உரியவர்கள் யாழ்ப்பாணம் சென்றுள்ளனர்.

5/5/86 ஈழநாடு.

# மக்கள் பார்வைக்கு கொள்ளைப் பொருட்கள்

## ஆரியகுளம் சந்தியிலும் வாகனங்கள்

(யாழ்ப்பாணம்)

இயக்கம் ஒன்றினால் தேடுதல் நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட யந்திர சாதனங்கள், தொலைக்காட்சிப்பெட்டிகள், கசட் றேடியோக்கள், தட்டச்சு யந்திரங்கள், மின்விசிறிகள், றக்கோட் பிளேயர்கள், ஸ்பீக்கர்கள், கஸட்டுகள் ஆகிய பொருட்கள் நேற்றும் யாழ் நகரில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

யாழ். கஸ்தூரியார் வீதி—ஸ்ரான்லி வீதிச் சந்தியில் இப்பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. காலை முதல் பெருந்திரளான மக்கள் இவற்றைப் பார்வையிட்டனர்.

10 கார்கள், 11 மோட்டார் சைக்கிள்கள், 3 டிராக்டர்கள் 4 மினி வான்கள், 4 ஜீப்கள், 2 மினி பஸ்கள், ஒரு திறாத லொறி ஆகியவையும் இங்கு பார்வைக்கு விடப்பட்டுள்ளன.

இங்கு இடவசதி போதாததால் ஆரியகுளம் சந்தியிலும் சில வாகனங்கள் விடப்பட்டுள்ளன. இங்கு நான்கு கார்கள், இரு லொறிகள், இரு மினி வான்கள், ஒரு ஜீப், இரு சிறிய வான்கள் ஆகியன மக்கள் பார்வைக்கு விடப்பட்டுள்ளன. (க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





'We the Liberation Tigers wish to express our support for and solidarity with all revolutionary liberation struggles of the oppressed masses of the world'

# WE CONDEMN U.S. STATE TERRORISM: SOLIDARITY WITH LIBYAN PEOPLE

We, the Student Organisation of the Liberation Tigers of Tamil Eelam (S.O.L.T.) vehemently condemn U.S. imperialist aggression against Libya. The U.S. air strikes on Libya is a blatant act of international terrorism aimed to impose U.S. militaristic hegemony on the Third World.

The U.S. act of armed aggression violates the principles of the U.N. Charter and callously disregards all norms of international law. This immoral, irresponsible act against a progressive, sovereign Arab nation constitutes a serious threat to international peace and security.

The U.S. imperialists have accused Libya of terrorism. In reality who are the terrorists. Who practices international terrorism to dominate and exploit the world. Who was responsible for the senseless slaughter of hundreds of thousands of innocent Vietnamese civilians. Who bombarded and destroyed thousands of villages in Kampuchea, who invaded Grenada. Who is sending the counter-revolutionary contras into Nicaragua Who is aiding and abetting the zionist Israel to suppress the Palestinian revolution and Tamil Eelam liberation struggle.

It is the U.S. imperialists who are the real terrorists. It is America who practises international terrorism to dominate and exploit the world. It is America who is the arch enemy of humankind and a threat to world peace and security.

While denouncing the U.S. imperialists we express our strong support and solidarity to the Government and the people of Libya at this critical hour when they are faced with intimidation from U.S. state terrorism.

We wish every success to the great Libyan revolutionary hero Colonel Gaddafi who courageously challenges Rambo Reagan and his band of international criminals.

Victory to Libyan People
Long Live Colonel Gaddafi

**Student Organisation**
**of**
**Liberation Tigers.**



Colonel Muammar Qadhafi

www.tamilarangam.net



# தென்னுப்பிரிக்காவுடன் இலங்கை உறவு: ஐ.நா.கமிட்டியில் எதிர்ப்பு

ஐ.நா. நியூயார்க், மார்ச் 15—நிற வெறிக் கொள்கையைப் பின்பற்றும் தென்னுப்பிரிக்காவுடன் தனியார் துறை மூலம் இலங்கை வர்த்தகத் தொடர்பு வைத்துக் கொண்டுள்ளதற்கு ஐ.நா. கமிட்டியில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

வியாழனன்று நடந்த இக் கமிட்டிக் கூட்டத்தில் இலங்கையில் உள்ள இனப் பிரச்சினை பற்றியும் பல கேள்விகள் கேட்கப்பட்டன.

இலங்கை அரசு சம்பந்தப்படாத வரையில் இலங்கையின் வர்த்தகர்கள் தென்னுப்பிரிக்காவுக்குத் தேயிலை விற்பதிலோ இலங்கையர்கள் தென்னுப்பிரிக்கருடன் கிரிக்கெட் ஆடுவதிலோ தவறில்லை என்று இக் கமிட்டியில் இலங்கையின் பிரதிநிதி நியாய விளக்கம் கூறினுர்.

உடனே இதற்கு ஆட்சேபங்கள் கிளம்பின.

இக் கமிட்டியானது உலகில் இனப்பாகுபாட்டை ஒழிப்பது பற்றிய கமிட்டியாகும்.

தென்னுப்பிரிக்காவுக்கு இலங்கையிலிருந்து தனிப்பட்ட வர்த்தகர்கள் தேயிலை ஏற்றுமதி செய்ய இலங்கை அரசு அனுமதிக்கக் கூடாது என்று பல்கேரிய நிபுணர் கூறினுர்.

தென்னுப்பிரிக்காவுடன் பொருளாதார உறவு கூடாது என்று கூறும் ஐ.நா. தடை எதுவும் இல்லாததால் இலங்கையர்கள் தென்னுப்பிரிக்காவுடன் வர்த்தகம் நடத்துவதை தமது அரசு தடுக்கவில்லை என இலங்கை அரசு வக்கில் சுனில் டி சில்வா பதிலளித்தார்.

எனினும் கமிட்டியின் கருத்துகளை தமது அரசுக்குத் தெரிவிப்பதாக அவர் கூறினுர். சட்டபூர்வ சாத்தியக்கூறு இருக்குமானுல் அது ஆராயப்படும் என்ருர் அவர்.

இந்தியா உட்பட பல நாடுகள் தென்னுப்பிரிக்காவுடன் எவ்வித உறவும் வைத்துக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கமிட்டி 18 உறுப்பினர்களைக் கொண்டதாகும். இனப்பாகுபாடு ஒழிப்புக்கான உடன்பாட்டை நாடுகள் பின்பற்றுகின்றனவா என்று ஆராய்வது இக்கமிட்டியின் பணியாகும். இலங்கை இதுபற்றி அளித்த அறிக்கை பற்றி கமிட்டி ஆராய்ந்தது.

### தமிழர் பிரச்சினை

இலங்கையில் உள்ள இனப் பிரச்சினையும் இக் கமிட்டி கூட்டத்தில் எழுப்பப்பட்டது.

இலங்கை அரசாங்க வக்கில் இலங்கையில் உள்ள இனப் பிரச்சினை பற்றிக் கூறுகையில், பல சமயங்களிலும் வெளித் தூண்டுதல்களால் இவ்விதம் ஏற்படுகின்றன என்று கூறி இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு பிறர் மீது பழி போட முயற்சித்தார். சைப்ரஸில் இதுபோல நடந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ஈழப் போராளிகள் மீது குற்றம் சாட்டினுர். தங்கள் கோரிக்கையில் சற்றும் விட்டுக் கொடுக்க முடியாது என ஈழப் போராளிகள்தான் விறைப்பான போக்கைக் காட்டுவதாக அவர் குற்றம் சாட்டினுர்.

போர் நிறுத்த அறிவிப்பு பற்றி அவர் குறிப்பிட்டார். போர் நிறுத்தத்தை ஈழப் போராளிகள் வாய்ப்பாகப் பயன்படுத்தி ஆயுதங்களைக் குவித்துக் கொண்டு விடக் கூடாது என்று இலங்கை அரசு கவலைப்படுவதாக அவர் சொன்னுர்.

உண்மையில் இலங்கை அரசுதான் போர் நிறுத்தத்தை வாய்ப்பாக்கிக் கொண்டு பல நாடுகளிலிருந்தும் நவீன ஆயுதங்களை வாங்கியுள்ளது. இதனை மூடி மறைக்கவே அவர் இவ்விதம் கூறினுர்.

## இலங்கை படுகொலைகளை கண்டிக்க பாரதீய ஜனதா வலியுறுத்தல்

சென்னை, மார்ச் 15—இலங்கையில் நடைபெற்றுவரும் இனப்படுகொலையைக் கண்டித்து இந்திய பாராளுமன்றத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அதுமட்டுமில்லாமல் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மனித உரிமைப் பாதுகாப்பு மாநாட்டில் இப்பிரச்சினை கொண்டு செல்லப்பட்டு இலங்கை அரசு செய்துவரும் இனப்படுகொலை வன்மையாக கண்டிக்க வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாடு கிளை பொறுப்பாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## SUNDAY

30-3-86

ஸ்ரீலங்காவில் தமிழருக்கெதிரான முனைப்பான படுகொலைத் தாக்குதலை, அண்மையில் இடம் பெற்ற தமிழ்ப் பொதுமக்களின் குடியிருப்புகள் மீதான ஆகாய விமானக் குண்டு வீச்சு வெட்ட வெளிச்சமாக்கியது. இதற்கெதிரான சர்வதேச அழுத்தத்தைத் திரட்டும் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான நேரம் இந்தியாவுக்கு வந்துவிட்டது.

## தமிழர் உறுப்புக்கள் ஏற்றுமதி

விடுதலைப்புலிகளின் அறிக்கையின்படி "மனித திசுக்கள் வங்கி" ஒன்று அரசினுல் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டு அதில் கொல்லப்படும் தமிழர்களின் இருதய வால்வுகள், கிட்னி, தோல், கண், எலும்பு, செவிப்பறை மற்றும் உறுப்புக்கள் போன்றவற்றைப் பத்திரமாக டாக்டர்களைக் கொண்டு எடுத்து, மேற்படி வங்கியில் சேமிக்கப்பட்டு வருகிறது. இதை வெளிநாடுகளுக்கு அமோக விலைக்கு விற்கிருர்கள்.





# ஒடுக்குமுறைகள் தமிழர்களை விடுதலை வீரர்களாக்குகிறது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

# Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)

## தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ விடுதலை இயக்கத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்கள்பற்றிய விளக்க அறிக்கை

***********************

கடந்த 25-4-86 வெள்ளிக் கிழமை அன்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள கடற்படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலொன்றின் போது எமது இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவராகிய மேஜர் அருணா என்பவர் வீரமரணமடைந்தது நீங்கள் யாவரும் அறிந்த ஒரு கவலை தரும் செய்தியாகும். தமிழீழ பொது மக்கள் கடைகள், நிறுவனங்கள் அனைத்தையும் மூடி துக்கதினம் அனுஷ்டித்து மறைந்த எமது மேஜருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்

இது இவ்வாறிருக்க, மேற்படி சம்பவத்திற்கு முதல் நாள் அன்று TELO இயக்கத்தினரின் படகொன்று சிங்களக் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி அதில் சென்றவர்கள் கொல்லப்பட்டதை அடுத்து, தமது இறந்த இயக்கத்தவர்களுக்கு துக்கதினம் அனுஷ்டிக்குமாறு பொது மக்களை இவ்வியக்கத்தினர் கேட்டிருந்தனர்.

ஆனால் TELO வினரால் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைகள், அடாவடித்தனங்கள் காரணமாக வெறுப்படைந்திருந்த தமிழீழ மக்கள் துக்கதினம் அனுஷ்டிக்க மறுத்துவிட்டனர். அதன் பின்னர் நடைபெற்ற எமது வீரரின் மறைவிற்கு பொது மக்கள் பூரண ஆதரவுடன் கடைகளை அடைத்து துக்கதினம் அனுஷ்டித்ததினால் கொதிப்படைந்த TELO இயக்கத்தினர் கடைகளை திறக்குமாறு பொது மக்களையும், வர்த்தகர்களையும் தாக்கி பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனையடுத்து பாதிப்படைந்த பொதுமக்களை எமது முக்கிய உறுப்பினர்களான பசீர்காக்கா, முரளி என்பவர்கள் அணுகி அவர்களுக்கு ஆறுதல்கூறி சமாதானப் படுத்திக் கொண்டிருந்த வேளையில், இவ்விருவரும் TELO இயக்கத்தின் வெறியர்களினால் கோழைத்தனமான முறையில் கடத்திச் செல்லப்பட்டனர். இதன் பின் நிலைமையை விளக்கி கடத்தப்பட்ட எமது வீரர்களை விடுவிக்கும் நோக்கத்துடன் எமது இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவரான லிங்கம் என்பவர் TELO வினரை அணுகிய போது அவர்கள் சமாதான முயற்சிக்காக சென்ற எமது தளபதியை மிகவும் அநீதியான முறையில் சுட்டுக்கொன்றுள்ளனர். இறுதியில் கடத்தப்பட்ட எமது வீரர்களை விடுவிக்கவும் TELO வினரின் வெறிச் செயல்களுக்கு முடிவுகட்டுமாறு பொதுமக்கள் எம்மைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும் TELO வின் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள நாம் நிர்ப்பந்திக்கப் பட்டோம்.

எமது வீரர்கள் பொதுமக்களின் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் தமிழீழ மெங்கும் உள்ள TELO இயக்கத்தவர்களின் முகாம்களைச் சுற்றிவளைத்து அனைத்து TELO இயக்கத்தினரையும் சரணடையுமாறு பணித்தனர். ஒரு சில முகாம்களில் இருந்த TELO இயக்கத்தினரைத் தவிர மற்றைய முகாம்களில் இருந்த அனைத்து TELO இயக்கத்தவரும் தங்களது ஆயுதங்களுடன் எமது வீரர்களிடம் சரணடைந்தனர். சரணடைய மறுத்த TELO இயக்கத்தவர் மாறாக எமது வீரர்களை எதிர்த்து தாக்குதல் நடத்தினர். எமது வீரர்களுக்கும் TELO இயக்கத்தினருக்கும் ஏற்பட்ட இந்த மோதலில் ஏறக்குறைய பதினாறு TELO இயக்கத்தினர் இறந்தனர். அத்துடன் உள்ளூரில் பயிற்றுவிக்கப்பட்ட மூன்று, எமது வீரர்களும் பலியானார்கள். மேலும் இச் சம்பவங்கள் தொடர்பாக வவுனியா பகுதியில் எமது ஆதரவாளர்கள் மூவர் TELO இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

TELO இனரின் பொறுப்பற்ற நடவடிக்கைகளாலும்கண்மூடித்தனமான போக்கினாலும் நடைபெற்ற இத்துர்ப்பாக்கிய சம்பவத்திற்கு முற்றிலும் பொறுப்பாளியான TELO தலைவர் சிறீ சபாரத்தினத்தை விசாரிக்கும் பொருட்டு எமது வீரர்கள் அவர் தங்கியிருந்த வீட்டினைச் சுற்றிவளைத்து அனைவரையும் சரணடையுமாறு பணித்தனர். அங்கிருந்தவர்கள் இந்த வேண்டுகோளை உதாசீனம் செய்து எதிர்த்தாக்குதலில் இறங்கினர். இதனால் ஏற்பட்ட மோதலில் TELO இயக்கத் தலைவர் சிறீ சபாரத்தினம் படுகாயமுற்று மரணமடைந்தார். மோகன் எனப்படும் TELO இன் முக்கிய உறுப்பினர், ஆயுதங்களுடன் சரணடைந்த பலரும் எதுவித துன்புறுத்தலுமின்றி விடுவிக்கப்பட்டனர்.

இரண்டு நாட்களாக தொடர்ந்து நடைபெற்ற மோதல்களின் விளைவாக தமிழீழ மெங்கும் உள்ள சகல TELO இயக்க முகாம்களும் எமது வீரர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் தமிழீழமெங்கும் அமைதிநிலைமையும் கொண்டுவரப்பட்டது.

15ம் பக்கம் பார்க்க

www.tamilarangam.net



14ம் பக்கத் தொடர்ச்சி..

TELO இயக்கத்தினரால் கொள்ளையிடப்பட்ட வாகனங்கள், நகைகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வீடியோக்கள் மற்றும் பல பொருட்கள் TELO இயக்க முகாம்களில் இருந்து விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப் பட்டு, அவற்றினை உரியவர்களிடம் கையளித்தும் வருகின்றனர். அடையாளம் காணப்படாத பொருட்கள் பல யாழ் நகரத்தின் சில முக்கிய வீதிகளில் பொதுமக்களின் பார்வைக்காகவும் வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் இந்தக் கட்டுக்கோப்பான இராணுவ நடவடிக்கையினை தமிழீழ மக்கள் பலவிதங்களில் பாராட்டி, விடுதலைப் புலிகளுக்கு தங்களது முழு ஆதரவினையும் தெரிவித்துள்ளார்கள்.

நிலைமை இவ்வாறிருக்க உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளிநாடுகளில் வதந்திகள் வடிவில் பரப்பி வரும் சில தீயசக்திகளின் பொய்ப்பிரசாரங்களை தமிழ் மக்கள் இனியும் நம்பப் போவதில்லை என்பது திண்ணம்.

மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள், இனியும் குழம்புவார்கள் என்று நினைப்பின் அது பகற்கனவே!

## ஒழுங்கு = வெற்றி

எந்த ஓர் விடயத்திற்கும்அது சரியாக நடப்பதற்கு ஒழுங்கும் கட்டுக் கோப்பும் இன்றியமையாதது.

இது பெரிய புரட்சிகள் போராட்டங்கள் முதல் சிறு சிறு தனி மனிதன் வரை பொருந்தும். ஓர்மனிதன் தன் வாழ் நாளில் ஒழுங்கோடும் கட்டுப்பாடோடும் கட்டுக்கோப் போடும் வாழ்ந்தாலே அவன் மனிதனாக வாழ்வான். ஒரு போராட்டத்தின் புரட்சியின் வெற்றிக்கோ அல்லது எந்த ஓர் விடயத்தின் வெற்றிக்கும் ஒழுங்கு கட்டுக்கோப்பு இன்றியமையாது. இவையற்ற எந்த விடயமும் நிச்சயமாக அழிவுறும். எனவே

ஒழுங்கு = வெற்றி

தன்னைத் துறந்து, தன் இனிய வாழ்வைத் துறந்து, தன் சொத்து சுகங்களைத் துறந்து காடுகளிலும், மேடுகளிலும், உடம்பை விறைக்கும் குளிரிலும், பனியிலும், சுட்டெரிக்கும் வெய்யிலிலும், மழையிலும், இம் மண்ணின் விடுதலைக்காக உயிர் நீத்த தியாகிகள் நூற்றுக் கணக்கில் இன்றும், நாளையும் இம் மண்ணின் விடிவிற்காக மறையப் போகும் உயிர்கள் ஏராளம். இந்தத் தியாகிகளால் நிச்சயமாக ஓர் சுகபோக வாழ்க்கையை வாழ்ந்திருக்க முடியும். ஆனால் நாம் நேசிக்கும் மக்களிற்காக, மண்ணிற்காக இவர்களின் தியாகப் பயணம் தொடர்கிறது...

இதே நேரம் பயிரோடு களையும் வளரும் காலம், மக்களை மதியாத மக்களை, விரோதிக்கின்ற மக்களை, நேசியாத புல்லுருவிகள் களையப் படவேண்டும். மக்கள் போராட்டம் இயல்பாக இவற்றைச் செய்யும். விலகுவன விலகி, உடைவன உடைந்து, அழிவன அழிந்து ஓர் ஒழுங்கமைவில் வருவது நிச்சயமாகும்.

மக்களை நேசிக்கும் மக்கள் போராளிகளோடு மக்கள் அணி திரள வேண்டும். கட்டாயமாக மீண்டும் மீண்டும் பிழைகள் சுட்டிக் காட்டப்பட்டு, விமர்சித்து தெளிவான வழியைக் காண வேண்டும்.

**கற்பனாவாதத்தை நம்பி ஏமாந்து வரும் சந்திப் போராளிகளே!**

**முதலில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான சரியான பாதையை வரித்துக் கொள்ளுங்கள்!**

**கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்ளுங்கள்!**

**கட்டுக்கோப்பை ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்!!**

**விடுதலையுணர்வைப் பெறுங்கள்!!!**

**நீண்ட விடுதலைப் பயணத்தை நோக்கி- - - -**

**எம் மக்கள் தெளிவாய் உள்ளார்கள்**

**உண்மையை உணர்ந்து வருகிறார்கள்**

**மக்கள் விடுதலை நிச்சயம்**

தமிழீழ மக்களே!

அண்ணல் சொன்னார், தந்தை சொன்னார்!

அண்ணன் சொன்னார் அக்காவும் சொன்னார்!!

எனவே சொல்வது யாருக்கும் சுகம். சாதனையாக்குவது மக்களே.

முடிவு மக்கள் கையில்!!!!

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## INTERVIEW

ethnic identity of the Tamil nation. This calculated State oppression was directed against the very foundations of Tamil society — its language, culture, economic life and the traditional homeland. It brought untold suffering to our people. Moreover, State-organized violence was let loose on our people, which erupted on the island periodically with huge loss of life and property. The holocaust of State terror still continues with unabated fury.

At the initial stages, our people adopted peaceful forms of agitation based on the Gandhian principle of *ahimsa*. They organized *satyagraha* campaigns and disobedience movements to protest against State violence. For more than two decades, our people demanded a form of regional autonomy to secure our political rights. But our demands never found a sympathetic hearing. Agreements and pacts were abrogated by successive Sri Lankan Governments. Instead of resolving the conflict by peaceful means, the Sri Lankan rulers adopted a ruthless policy of military repression.

It was against this background of mounting repression, at a time when our people had exhausted all forms of peaceful political agitation, that the armed revolutionary struggle took birth in the early '70s. The Tiger movement was the pioneer of the armed resistance campaign and eventually became the vanguard of the national struggle. Our armed struggle has advanced the cause of our freedom, posed a serious challenge to the State and attracted international attention towards the Tamil issue. This, briefly, is the background of our struggle.

■ *What role did the Sinhalese politicians and the Buddhist clergy play in this crisis?*

**PRABHAKARAN:** Both the Sinhalese politicians and the Buddhist clergy played a crucial role in creating this national conflict. Politicians sow the seeds of racism among the Sinhalese people simply to gain political power. The Buddhist clergy, on their part, generated religious fanaticism and chauvinism. The Sinhala-Buddhist chauvinistic ideology became a powerful force, swaying the masses towards anti-Tamil politics and laying the foundation for the present crisis.

■ *Whose interest does the present crisis serve?*

**PRABHAKARAN:** The present crisis serves the interest of the US imperialists and the comprador Sinhala bourgeoisie. The consequences of this will certainly affect the geo-political interests of India in this region.

■ *Why are the militants so allergic to the Tamil United Liberation Front (TULF)? You have even charged them of being opportunists.*

**PRABHAKARAN:** The political opportunism of the TULF is a well-known factor. They are power hungry politicians who have been cheating our people due to their selfish political ambitions. In the 1977 general elections, they obtained a mandate from our people to struggle to establish an independent Tamil State, but never made any effort to fulfil the pledge. Rather, they sought to negotiate for meagre concessions. I would categorize this as gross betrayal and opportunism.

■ *How do you view the attempts made by certain Tamil Nadu leaders to fan chauvinistic feelings? Do you think this sectarian attitude of Tamil Nadu leaders will harm your cause?*

**PRABHAKARAN:** We do not see them in that perspective. Tamil Nadu leaders are genuinely concerned about the plight of their Tamil brethren in neighbouring Sri Lanka. Whenever atrocities are committed against the Tamils by the Sinhala Army, the leaders of Tamil Nadu organize agitations to register their protest. There is a tremendous feeling of brotherhood and solidarity for the Tamil cause in Tamil Nadu. They feel that India should help to resolve the problem and save the Tamil people from genocide.

■ *There have been reports from time to time that the militants are being trained in India and also that they have training camps here. What do you say about these reports?*

**PRABHAKARAN:** There is no truth in such reports. We don't have any camps in India. All our camps are on our own soil.

■ *What role do you think India can play in finding an acceptable solution to the Tamil crisis?*

**PRABHAKARAN:** The people of India have been championing the cause of freedom of the oppressed people all over the world. The Indian people have a great tradition of upholding the principles of justice and humanism. They have supported the liberation struggles in Palestine, Namibia and South Africa. They recently recognized the Polisario freedom movement. I sincerely hope that the people of India will support a liberation struggle in their neighbourhood and recognize the right to self-determination of the people of Tamil Eelam.

12/05/86 அன்று UNI நிருபரால் வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கும், வானொலிகளுக்கும் கொடுக்கப்பட்ட உண்மைக்குப் புறம்பான செய்திகளை மறுத்து விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட

அறிக்கை

*******

விடுதலைப்புலி உறுப்பினர்கள் TELO இயக்க உறுப்பினர்களுடன் கொடூரமான முறையில் நடந்து கொண்டார்கள் என்று யாழ்ப்பாண செய்திகளை ஆதாரம் காட்டி இந்திய UNI நிருபர் பத்திரிகைகளுக்கு செய்தி வெளியிட்டிருந்தார். இக் குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் இயக்கம் வன்மையாக மறுக்கிறது. விடுதலைப்புலி வீரர்களிடம் சரணடைந்த இளம் TELO இயக்க உறுப்பினர்களை சுட்டுக் கொன்றதாகவும், உயிரோடு கொளுத்தியதாகவும் கூறப்பட்ட செய்திகளை நாம் ஆணித்தரமாக மறுக்கின்றோம். விடுதலைப்புலி வீரர்களிடம் சரணடைந்த அனைவரையும் நாம் விடுதலை செய்து விட்டோம் எனவும், கடுமையான எதிர்ப்பு காட்டிய இடங்களிலேயே இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இம்மோதலில் விடுதலைப் புலி வீரர்கள் வெறி பிடித்தவர்கள் போல் வெறித்தனமாக நடந்து கொண்டார்கள் என்றும் மிருகத்தனமான செயல்களை செய்தார்கள் என்றும் கூறப்படும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் அறிவிக்கின்றோம். அப்பத்திரிகை நிருபர் எதையும் நேரடியாக காணவில்லை. நேரில் காட்சிகளை கண்டோம் என கூறப்பட்டவர்கள் TELO ஆதரவாளர்களே, இவ் TELO ஆதரவாளர்களிடம் இருந்து பாரபட்சமான வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளது.

EPRLF இனால் நடத்தப்பட்ட கர்த்தால் பூரண வெற்றியளிக்கவில்லை. தமிழீழப் பத்திரிகைச் செய்திகளின்படி சில கடைகள் மூடப்பட்டிருந்தன என்றும் பாடசாலைகள் பல் சேவைகள் வழமை போல் நடைபெற்றன என்றும் அறியப்படுகின்றது. TELO இல் இறந்தோர் பெரும்பாலானோர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது எவ்வித ஆதாரமும் அற்ற கூற்றாகும். எமது நடவடிக்கைகட்கு எதிராக யாழ்குடா நாட்டில் எவ்வித மக்கள் எதிர்ப்பும் கிளம்பவில்லை என்ற உண்மையை மறைக்கவே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

TELO இயக்கம் ஒரு சமூக விரோத கும்பலாக செயற்பட்டதுடன் பல குற்ற செயல்களைப் புரிந்தும், மக்களை மிரட்டியும் வந்துள்ளனர். எனவேதான் TELO இயக்கத்தினரை கண்டிக்கும் நோக்குடன் எடுக்கப்பட்ட இவ் நடவடிக்கையை தமிழ் மக்கள் ஆதரித்தனர்.

TELO இயக்க உறுப்பினர்கள் கட்டுப்பாடு இல்லாமலும், எவருக்கும் அடங்காத முறையிலும் செயல்பட்டனர். அவர்கள், தமிழர் ஐக்கிய முன்னணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொலைகள் உட்பட கொள்ளைகள், ஆள், வாகன கடத்தல்கள், பொது மக்களைக் கொலை செய்

17ம் பக்கம் பார்க்க

www.tamilarangam.net



# சிங்கராயர் விடுதலை நீதிக்கு ஒரு வெற்றி!



நீர்வேலி வங்கிக் கொள்ளைப் பணத்தை மறைத்து வைத்திருந்ததாகவும், அது குறித்துப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் போலீசாருக்குத் தகவல் கொடுக்கவில்லையென்றும், வண. பிதா. ஆபரணம் சிங்கராயர்மீது, சிங்கள அரசு தொடுத்திருந்த வழக்கு, கொழும்புமேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். சேனநாயகாவினால், 3-3-86இல் தள்ளுபடி செய்யப்பட்டு, திரு சிங்கராயர் விடுதலை செய்யப்பட்டார்.

1982 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி கைது செய்யப்பட்ட வண. பிதா. சிங்கராயர் சிறையுடைப்புக்களின்போது வெளியேருது, வழக்கைச் சந்திக்கத் தயாராக இருந்தார்.

180 நாள் நடைபெற்ற இவ்வழக்கில் வண. சிங்கராயர்மீது குற்றம் சரியாக நிரூபிக்கப்படவில்லை என்று தமது தீர்ப்பில் கூறினர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் போடப்பட்ட வழக்குகளில், அரசுக்கு எதிராகத் தீர்ந்த முதலாவது வழக்கு இதுவேயாகும். 1983 பிப்ரவரி ஏழாம் திகதி ஆரம்பமான இவ்வழக்கு, 3-3-86இல் முடிவடைந்து. பிதா சிங்கராயர் 50 நாட்கள் சாட்சியம் அளித்தார்.

"பயங்கரவாதத் தடைச் சட்டம் எவ்வளவு கொடியது என்பதை சகலருக்கும் எடுத்துக் காட்டவே, சிறையுடைப்பின் போது வெளியேருது. சிறைத் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு உள்ளே இருந்தேன். அதன் பயன் இன்று தெரிந்து விட்டது" என்று 45 வயதுடைய வண. பிதா. சிங்கராயர் மகிழ்வுடன் கூறினர்.

அவர் மேலும், பத்திரிகை நிருபர்களுடன் பேசியபோது, "தமிழீழம், சிறீலங்கா என்ற இரு நாடுகளைக் கொண்ட இவ்விலங்கைத் தீவில் (Two country—one Island) ஒரு நாடு அடிமையாக இருக்கும்போது, இன்னேர் நாடு சுதந்திரமாக வாழ முடியாது. தமிழீழம் சுதந்திரம் பெற்ருல் மட்டுமே, சிறீலங்காவும் உண்மையான சுதந்திரம் அடையும். தமிழீழ விடுதலைப் புலிகள் உயிரைப் பணயம் வைத்துப் போராடி வருகின்றனர். அவர்களது தீரத்துக்கும் தியாகத்துக்கும் தலை வணங்குகிறேன். சிறீலங்கா அரசு கூறுவது போல, எமது போராளிகள் மார்க்சீசியவாதிகளோ, கொலைகாரர்களோ அல்லர்; அவர்கள் உண்மையான விடுதலை வீரர்கள்"

எனினும் இவருக்கு எதிராக இன்னும் இரு வழக்குகள் இருப்பதாகக் கூறி, சிங்கள அரசு இந்த மனச் சாட்சியின் கைதியை (PRISONER OF CONSCIENCE) தொடர்ந்து விளக்க மறியலில் வைத்துள்ளது.

## "தமிழ்ப்போராளிகளை ஆயுதங்களைக் கீழே போடும்படி கோர மாட்டோம்" சிங்கள அரசின் முப்படைத் தளபதிக்கு மட்டக்களப்புஆயர் பதில்.

வடக்கு, கிழக்கு பகுதி நிலை குறித்து தமிழ்ப்பகுதிகளின் ஆயர்களை சந்தித்து பேச முன்வந்த இலங்கை அரசின் முப்படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்காவுக்கு பதிலளிக்கு முகமாக திருகோணமலை, மட்டக்களப்புமறை மாவட்ட ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை அவர்கள் "அர்த்தமுள்ள சந்திப்பாக இருந்தால் மனச்சுத்தியுடன் பேசவிரும்பினுல் நாம் தயார். இத்தகைய சந்திப்புக்கள் கடந்த காலத்திலும் இடம் பெற்றிருக்கின்றன. ஆனுல் அர்த்தமில்லாத சந்திப்புக்களாகவே முடிவுற்றன. தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும், தமது நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று எங்கள் மூலம் கோரிக்கை விடுப்பதற்காக அவர் சந்திப்பாராஞல் அதில் பிரயோசனமும் இல்லை, அர்த்தமும் இல்லை" என்று கூறியிருக்கின்ருர்.

16ம் பக்கத் தொடர்ச்சி..

தல் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தனர் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். கோயில்களில் கொள்ளையடிக்கப்பட்டதற்கும், பொது மக்களின் நூற்றுக்கணக்கான வாகனங்கள் கடத்தப்பட்டதற்கும் TELO உறுப்பினர்களே பொறுப்பாளிகளாவர். இப்படியான சமூக விரோத செயல்களினுல் TELO இயக்கமானது வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வெறுப்பிற்கு ஆளாகியிருந்தது. இதனுல் தான் மக்களின் ஆதரவை இழந்த பிற்போக்குவாத TELO கும்பலிற்கு எதிராக விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இவ் நடவடிக்கைகளை தமிழீழ மக்கள் வரவேற்றனர்.

உள்ளூர் பத்திரிகைகள் இந்நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடும் பொழுது, மக்கள் மகிழ்ச்சியடைந்தது மட்டுமல்லாமல் இவ் நடவடிக்கைகளில் ஈடுபட்ட விடுதலைப்புலி வீரர்கட்கு குளிர்பானம் வழங்கினர் என தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கையானது இந்தியாவின் சமாதான முயற்சியை முறியடிக்கும் முகமாக திட்டமிட்டு நடத்தப்பட்டது என்ற UNI நிருபரின் செய்தியானது திரிக்கப்பட்ட அப்பட்டமான பொய்யாகும். விடுதலைப், புலிகள் இந்தியாவின் சமாதான முயற்சிகளை எப்போதும் ஆதரித்தே வருகிருர்கள்.

எதிர்பாராத இச்சம்பவம் TELO இயக்கத்தவர்கள் எமது மூத்த உறுப்பினர்களை கடத்தியதாலும் லிங்கம் என்ற தளபதியை கொலை செய்ததாலும் ஏற்பட்டதாகும். யாழ்ப்பாணத்தில் இந்தியாவிற்கு எதிராக ஒட்டப்பட்ட சுவரொட்டிகளிற்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும், இந்தியாவிற்கும் விடுதலைப்புலிகட்கும் இடையில் பிளவை ஏற்படுத்தும் நோக்கிலேயே விடுதலைப் புலிகட்கு எதிரான சில தீய சக்திகள் இதைச் செய்துள்ளார்கள் என்பதும் புலனுகிறது.

**விடுதலைப்போர் ஓயாது! விடுதலை வேட்கை சாயாது!**

www.tamilarangam.net



2ம் பக்கத் தொடர்ச்சி..

நண்பா! இதன் காரணமாக லண்டனிலே TELO இயக்கத்தினரால் வெளியிடப் பட்ட பிரசுரம் ஒன்று கிடைக்கப் பெற்றதனால் படித்தேன். அதில் அவர்கள் ஏன் இந்தச் சம்பவம் நடந்தது என்பதனைக் குறிப்பிடாமல் மக்களுடைய அனுதாபத்தினைப் பெற்றுவிட எண்ணி கூற முடியாத சில பொய்களைக் கூறியுள்ளனர். அதாவது;

* ஒரே நேரத்தில் சிங்கள இராணுவம் ஆகாயத்திலும், புலிகள் தரை மார்க்கமாகவும் இணைந்து தமது முகாம்களைத் தாக்கியதாகவும்,

* சரணடைந்த TELO இயக்கத்தவரை வாகனத்தில் ஏற்றி குண்டு வைத்து தகர்த்ததாகவும்.

நண்பா! இவை நடக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சியா? என்பதனை எழுத முனைந்த ஏவலாளிகள் கூட எண்ணவில்லையே. அது மட்டுமல்ல பிரித்தானிய வானொலியும், பத்திரிகைகளும்"; கட்டுப்பாடும், கண்ணியமும், ஸ்திரமும் நிறைந்தது தமிழீழ விடுதலைப் புலிகள்" என கூறி பிரசுரித்த படியினால், புலிகளின் பின்னணியில் பிரித்தானியாவும், அமெரிக்காவும் இயங்குவதாகவும் எழுதியிருந்தனர். இதனை வாசித்து முடித்ததும் ஒரு பைத்தியக்காரனுடன் கதைத்து முடித்த ஓர் நிலையினை அடைந்தேன்

நண்பா! இன்று இவ்வாறான சம்பவங்களின் நிமித்தம் சிங்கள அரசானது புலிகளின் கொள்கையையும், ஸ்திரத்தையும், மக்கள் மத்தியில் உள்ள ஆதரவையும் கண்டு, ஏதாவது அரசியல் தீர்வுகாண வேண்டும் என முனைகின்றது. ஆனால் விடுதலைப் புலிகள் அன்று கொண்ட அதே இலட்சியத்திலிருந்து சற்றும் தளம்ப மாட்டார்கள் என்பதனை உறுதியுடன் கூறுகின்றோம்.

நண்பா! இறுதியாக ஒன்று கூறுகிறேன். நடந்த சம்பவத்தையிட்டு விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்க வேண்டாம் என சில தீயசக்திகள் பொய்ப் பிரசாரம் செய்கின்றனராம். தமிழீழ மக்களே சரியான ஓர் நடவடிக்கை, உரிய நேரத்தில் மேற்கொள்ளப் பட்டதாக புலிகளைப் பாராட்டி ஏற்ற போது, காற்றில் கலந்து வரும் உண்மைக்கு மாறான செய்திகளை கேட்டு நாம் சந்தேகம் கொள்ளக் கூடாது. இதையிட்டு உனக்கு மேலும் சந்தேகங்கள் இருப்பின், மேற்படி எமது அலுவலகத்துடன் தொடர்புகொண்டால், உனக்குப் போதிய விளக்கம் அளிக்கப்படும் என்று கூறி இம் மடலை முடிக்கிறேன்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அன்பு நண்பன்,
செபமணியர்.

## இனியும் சுணங்கேல்

கூட்டில் அடையுண்ட ஈழப் பசுங்கிளி குற்றுயிராய்
நாட்டில் சுதந்திரமாகப் பறந்திடும் நாளை எண்ணி
ஏட்டில் எழுதவும் ஏலாதவண்ணம் எழுப்பும் குரல்
கேட்டும் கிராரா திருப்பார் மனுத்தன்மை கெட்டவரே!

கீதைப் பெரும்புகழ் ஓயாது உரைத்திடும் பாரதமே
கீதை பிறந்த இடத்தை மறந்து கிளர்ச்சியின்றி
வாயில் கவலைகள் வடிக் கடைக்கிலே விட்டுரைத்தால்
நோயின் அவத்தை நொடிந்திடுமோ நவ பாரதமே!

வயலில் வியர்வை பிழியும் உழவன் படுகொலையும்
வரம்பில் உணவுவழங்கும் தமிழச்சி கற்பழிப்பும்
அனலில் எறியும் குழந்தை அலறும் அவலங்களும்
மனசில் உனக்குப் போர்க்குண மாண்பை மலர்த்தலையோ?

வயலில் வரம்பில் தெருக்களில் திண்ணை திருக்கோயிலில்
எரியும் பிணமே தெரிவது! வேறெதும் காணலமே!
நரியும் பிணந்தின்னும் நாய்களும் ககையும் ஓலமிட்டுத்
திரியும் மயான வெளியென ஈழம் தெரிகிறதே!

ஈழத் துருபதை ஓலம் இடும்குரல் இந்தியா உன்
ஈரச் செவியில் விழவில்லையோ? என்ன பரிதாபம்!
தழும் திறமையும் சூழ்ச்சியும் மிக்கவன் கண்ணனைப்போல்
பாழும் நவதுரி யோதனர்க்கோர் பாடம் புகட்டாயோ?

அழவும் முடியலை, ஐயோ அரற்றவும் ஏலுதில்லை
பழகு தமிழின் அமுதச் சுவையுண்ட பாவம்இதோ?
இழவும் இழப்புமே! ஈழத் தமிழன் தலைவிதியோ?
இளகா இயல்புநம் இந்திய நாட்டின் இருதயமோ?

நாசிப் படுகொலை எந்தொரு மூலைக்கு இணையாகுமோ?
தேசம் அனைத்திலும் சிங்கள ராணுவத் தீயர்களின்
நாச செயல்கள் நரபலி எங்கும் நடந்ததில்லை!
பாசம் மிகுந்திடும் பாரதமே நீ பதுங்குவதோ?

உள்விவ காரம் எனஓர் பலா னை மிதக்கவிட்டு
மெள்ள நழுவ முயன்றிடும் மேதைமை ஏதமையே!
எல்லை கடந்து மனித உயிர்களைக் கொன்றழித்து
அல்லற் படுத்தும் அடங்கா அரசுடன் நட்புறவோ?

மோட்டு மிராண்டிகள் ஏழைத் தமிழ் மக்கள் மீதுகுண்டு
போட்டு நரபலி கொள்ளும் கொடூரத்தை இவ்வுலகில்
வேட்டுவச் சாதியும் கேட்டுவிட்டுச் சும்மா இருக்காதே!
நாட்டில் பழம்பெரு நாடிதனைக் கண்டும் நசிவதுவோ?

தமிழகமே ஈழம் நொந்து துடிக்கும் தவிப்பில்உயர்
அமுதக் கரங்களை நீட்டி அணைத்திடும் தாயகமே!
இனியும் சுணங்கேல்! இருந்தது தெரியாது அழிந்திடுவோம்
வினையின் திறத்தால் விடுதலை தந்திடும்வீறுடையே!

குறிப்பு : ஈழம் என்பது தமிழீழத்தையே கருதும்.

-ஈழவன்-

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of
TAMIL EELAM

## விடுதலைப் புலிகள் மீட்டனர்

16-3-86 இல் தொண்டமானாற்றில் காணாமற்போன விடுதலைப் புலி சங்கரின் உடல், தொண்டமானாறு சிங்கள ராணுவ முகாமிலிருந்து, 300 யார் தூரத்தில் குறுக்காக வைக்கப் பட்டதையறிந்த விடுதலைப் புலி கெரில்லாக்கள், சங்கரது பூதவுடலைத் தவழ்ந்து சென்று மீட்டு வந்தனர். இவரது தலையிலும், தோளிலும், சில குத்துக் காயங்களே உள்ளன. எதிரியிடம் உயிருடன் பிடிபடுவதில்லை என்ற இயக்கக் கட்டுப்பாட்டுக்கமைய சங்கர் சைனைட் நஞ்சருந்தி வீர மரணம் அடைந்துள்ளார்.

## விடுதலைப் புலிகள் இரத்த தானம்

'ரெலோ' இயக்கத்தினரிடையே யாழ்ப்பாண மருத்துவமனையில் நடந்த துப்பாக்கிச் சண்டையின்போது (11-3-86) காயமடைந்த மருத்துவமனைத் தாதிக்கும், மற்றும் காயமடைந்து அபாய நிலையில் இருந்த ஏனைய நோயாளிகளுக்கும், பிரபா தலைமையில் இயங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் 12 பேர். ஆளுக்கு ஒன்றரை பைந்து வீதம் இரத்த தானம் வழங்கினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

**Student Organization of Liberation Tigers**

SOLT (U.K.)

SOLT (U.K.)

**(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)**

# புலிகளின் கலைப் மாலை

## பேரன்புமிக்க தமிழ்ப் பெரும் குடிமக்களே!

ஏப்ரல் மாதம் 13ம் திகதி நடைபெறவிருந்த 'புலிகளின் புயலிசை' இசை நிகழ்ச்சியினை தடுத்து நிறுத்தக் காரணமாயிருந்த தீய சக்திகளை இனம் கண்டு கொள்ள வேண்டுமெனஉங்களை வேண்டிக்கொள்ளும் அதே வேளை, இவ் இசை நிகழ்ச்சி இடம்பெறுததில் உங்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு , விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பிரித்தானியக் கிளையானது தனது மனவருத்தத்தினையும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகிறது.

தீய சக்திகளின் தலையீடுகளின் மத்தியிலும், பல சிரமங்களுக்கு மத்தியிலும் இங்கு வருகை தந்த விடுதலைப்புலிகளின் கலாச்சாரப்பிரிவின் மேற்கு ஜேர்மன் கிளையினரில் ஒரு பகுதியினரும், பிரித்தானியா வாழ் தமிழீழக் கலைஞர்களும் ஒருங்கிணைந்து, கடந்த 13ம் திகதி ஒழுங்கு செய்யப்பட்ட அதே மண்டபத்தில் ஏப்ரல் மாதம் 26ம் திகதி 'புலிகளின் புயலிசை' இசை நிகழ்ச்சியினை சிறப்புற நடாத்துவதற்கு உதவியளித்த தமிழ் மக்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.


# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

**Student Organization of Liberation Tigers**

SOLT (U.K.)

SOLT (U.K.)

**(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)**


<u>நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.</u>

விடுதலைப் புலிகள் கலாச்சாரப்படைப் பிரிவின் மேற்கு ஜேர்மன் கிளையினரின், ஜேர்மனியில் பல பாகங்களிலும் சுழன்று வீசிய "புலிகளின் புயலிசை" விடுதலை கீதங்களை பிரித்தானியாவிலும் மேடையேற்றுவதற்கு எமக்கு ஒத்துழைப்பு நல்கியதற்கு,
விடுதலைப்புலிகள் கலாச்சாரப்படைப் பிரிவின் மேற்கு ஜேர்மன் கிளையினருக்கு, விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பிரித்தானியாக்கிளை சார்பாக எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம்
பிரித்தானியாக் கிளை.


# சுதந்திரத்தமிழீழம் அமைப்பதே ஈழத்தமிழர்களின் ஒரே குறிக்கோள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் பிரித்தானிய கிளையினது சகல விதமான தபால் தொடர்புகள் கீழ்கண்ட முகவரிக்கே மேற்கொள்ளுமாறும், விடுதலைப் புலிகளுக்கான நன்கொடைத் தொகைகளோ, அன்பளிப்புகளோ விடுதலைப் புலிகளின் பிரசுரங்களின் கொடுப்பனவுகளோ SOLT இற்கு அனுப்பும்போது காசோலைகளை SOLT என்ற பெயரிற்கே அனுப்பி வைக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

ADDRESS :- SOLT,
BM Box 3694,
London WC1 N3XX.



விடுதலைப் புலிகள் காலண்டர்
விலை ... 

" விற்பனைக்கு "

# தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்

தமிழீழம் வானொலி - அலை வரிசை சிற்றலை 49 இல் தினமும் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும்.

தொலைக்காட்சி - வடமாகாணத்தில் (முன்னறிவித்தலுடன்)

நெதர்லாந்து - தொலைபேசிச் சேவை
1) (070)466.121.- டென்காக்தமிழில் 24 மணி நேரமும்.
2) சனி, ஞாயிறு காலை 9மணியிலிருந்து மாலை 9மணிவரை டச்சு, ஆங்கிலம்.

வானொலி - ஞாயிறு இரு தடவைகள் மாலை 12மணிமுதல் 1மணி வரை.

பிரான்ஸ் - தொலைபேசிச் சேவை
1)239.58.67-பாரிஸ் 24 மணிநேரமும்.

வானொலி - ஞாயிறு, வியாழன் ஆகிய இரு நாட்களில் மாலை 7மணி முதல் 8மணி வரை.
அலைவரிசை 102.7

நோர்வே - தொலைபேசிச் சேவை- இரு நகரங்களில்
1) (2)38.44.58- ஒஸ்லோ
2) (5)31.27.98- பேர்கன்
24 மணி நேரமும்.

லண்டன் - தொலைபேசிச் சேவை
1) 475 0543
24 மணி நேரமும்.

ஜேர்மனி - தொலைபேசிச் சேவை
(30)396.74.77 - பேர்லின்

கனடா - தொலைபேசிச் சேவை
(514)25542 -04 மொன்றியல்.

அமெரிக்கா - தொலைபேசிச் சேவை
201-481-2221



சிங்கள விமானப்படை வீசிய குண்டுகள் சில வெடிக்காமல் மணலில் புதைந்தன. அவற்றை எடுத்த விடுதலைப்புலிகள், அக்குண்டுகளில் ஒன்றை மக்கள் பார்வைக்காக யாழ்ப்பாணத்தில் வைத்துள்ளனர். 55 கிலோ எடையுள்ளதும் 4½ அடி நீளமானதுமான பாகிஸ்தான் சிங்கள அரசுக்குக் கொடுத்த இக் குண்டு சுமார் 200 யார் விஸ்தீரணமுள்ள இடத்தை அழிக்கக் கூடிய சக்தியுள்ளது.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்